SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 38-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 29-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பத்திமாவும் போர்த்துக்காலும்

[பத்திமாதிருப்பதிக்கு நடந்தேறிய அமெரிக்க ஐக்கியதேச முதல்தேசீய யாத்திரையைப்பற்றியும், அப்போது வானத்தில்தோன்றிய அற்புதக்காட்சி பற்றியும், போர்த்துக்காலைப்பற்றியும் ஸ்ரீமதி ஆன்ஸ்ருவாட்எனும்மாது எழுதியகட்டுரை ஈழேதமிழில் இசைத்தெழுதப்பட்டிருக்கிறது]

அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து போர்த்துக்கால்தேச பத்திமாபதியிலுள்ள செபமாலைநாயகியின் திருக்ஷேத்திரத்திற்கு நடந்தேறிய முதற்தேசீய யாத்திரை என்றைக்குமே மறக்கமுடியாத ஓர்மனப்பதிவை உண்டுபண்ணுவதாயிற்று. 1917-ம் ஆண்டு மூன்றுசிறுகிராமப்பிள்ளைகளுக்குப் பரிசுத்த தேவதாயார் ஆறுமுறை காட்சியருளிய அந்தத்தாழ்வான பசியநிலத்தில் ஓர்தரம் காலூன்றி நின்பதே எவர்உள்ளத்தையும் பயபத்தியாலும் ஆசாரவழிபாட்டாலும் நிரப்புவதாயிருந்தது. இரவும் பகலுமாக நாள் முழுவதுமே இடையருதுதொடர்பாகச் செபமாலைஓதியும், பரிசுத்ததேவதாயாருக்குத் தோத்திரமும், மகிமையுமாக மரியாயின் அருமையான சங்கீதங்களை இனிமையாகப் பாடியும்நின்ற இரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட போர்த்துக்கேய யாத்திரிகரின் சிறந்தவிசுவாசத்தையும்நிறைந்த பத்திபற்றுதலையும் கவனித்தபோது அந்தமகத்தானமனோகர காட்சியானது எம்மெல்லோரையும் உளங்கனிந்து ஆனந்தக் கண்ணீர் உருக்கச்செய்தது.

பத்திமாவின் வெண்மையான வைரமுள்ளகற்களும், வரண்ட சமநிலமும் உலகத்துக்குத் தேவதாயார் அருளியசெய்தியை-அதாவது செபமும், தினமும் செபமாலைசெபித்தலும், தவமும், தவசினல்உடலை வாட்டுதலும், தன்னைமறுத்தலும், திவ்விய பூசைகண்டு, ஐந்துமுதற்சனிக்கிழமைகளிலே திவ்வியநன்மை பெற்று, அவரதுமாசற்ற இருதயத்துக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்தலுமாகிய மாதாவின்செய்தியை மவுனமாக எடுத்துச் சொல்லுகின்றன. 1917-ம் ஆண்டுமுதல் இத்தனைவருடகாலமெல்லாம் போர்த்துக்கேயமக்கள் 'ஒளியின்நாயகி' காட்டியருளிய அதேயிடத்தில் கட்டப்பெற்றிருக்கும் சிறிய தரிசன சிற்றாலயத்துக்கு யாத்திரைகள்நடத்தி விசேஷவிதமாகத் தேவஅன்னையை மகிமைப்படுத்திவந்திருக்கிறார்கள். வைகாசிமாதமுதல் ஐப்பசியீறாக மாதந்தோறும் 13-ந்திகதியாகிய காட்சியருளப்பெற்றதினங்களிலே லட்சக்கணக்கானயாத்திரிகர்கள் சமூகமாக விசேஷஆராதனைவழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஐப்பசிமாசம் 12-ந்திகதியன்று நாள்முழுவதும் கால்நடையிலும், அதிலும் பெரும்பான்மையான பெண்கள் வெறுங்கால்நடையிலும், ஆடவர்கள் சிறியகழுதைகளில் சாரிசெய்தும் அல்லது பிள்ளைகளைநிறையஏற்றிய வண்டிகளை இழுக்கும் கழுதைகளின்பக்கமாகநடந்தும்,பழமையான மோட்டர்ரதங்கள், பஸ்களிலும் அப்புனிததலத்தை மையமாகக்கொண்டு பத்திமாபதியில் வந்துசரிந்துகொண்டிருந்த இந்தஆடம்பரமற்ற சாமானிய கிராமவாசிகளாலே வீதிகளெல்லாம் கருமையடைந்திருக்கக்கண்டோம். பாரம்பரியமான மெழுகுவர்த்திச்சுற்றுப்பிரகாரம் 12-ந்திகதி இரவு 11 மணிமுதல் 12 மணிவரையில் லேய்றியா-பத்திமா மேற்றிராணியாரான ஜோஸ்ஆண்டவர் தலைமையில் நடந்தேறியது. நடுச்சாமமுதல் 2 மணிவரையில் அங்குள்ளமகத்தான பஸிலிக்கா எனும் மகா ஆலயத்தின்முன்பாக அமைக்கப்பட்டிருந்த பலிபீடம்ஒன்றில் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து திருமணித்தியாலம் அனுசரிக்கப்பட்டது.

திவ்வியபூசைக்கும், சற்பிரசாதஆசீர்வாதத்துக்கும்பிற்பாடு நோயாளரும், பலவீனரும் தேவநற்கருணைகொண்டு தனித்தனியே ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதன்மேல் பத்திமாநாயகியின் திருச்சுரூபமானது எல்லோரும் தங்கள்கைக்குட்டைகளைஉயர்த்தி வீசிக்கொண்டிருக்க, மரியன்னைக்கு மிகவும்உவப்பான போர்த்துக்கேயகீதத்தை யாவரும் இன்பகரமாகப்பாடிநிற்க,சிறிய தரிசனசிற்றாலயத்திற்குச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டு போகப்பட்டது. பின்னர் போர்த்துக்கேய யாத்திரிகர்கள் தங்கள்பிரயாணத்தில் யாதாமோர் ஒழுங்கின்மையோ அன்றேல் நெருக்கமோஇல்லாது தங்கள் இல்லங்களுக்கும் கமங்களுக்கும் திரும்பினார்கள்.

12-ந்திகதிஇரவு மெழுகுவர்த்திச்சுற்றுப்பிரகாரத்தின்போது ஆகாயத்திலே அபூர்வமான

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## சூரியோதய நாட்டில்

2000 ஆண்டுகளாக ஆழ்ந்த அஞ்ஞானத்தில் அமிழ்ந்திக்கிடந்த யப்பான் இன்றுகிறீஸ்துவை வருந்திஅழைக்கிறது. 400 ஆண்டுகளுக்குமுன் அர்ச்.சவேரியார்கூறியதீர்க்கதரிசனவாக்கு இன்றுபலித்துவிட்டது. "யப்பான் தனதுசரித்திரத்திலேயே கண்டிராத ஓர்பெருந்தோல்வியை அடைந்தபின்பே, கிறீஸ்துவின்குரலொலிக்குச் செவிசாய்க்கும்" எனப்பகர்ந்தார்சவேரியார். அணுக்குண்டு யப்பானின்சரணகதிக்கு அடிகோலியது. ஆண்டவனின் அருளொலியும் பரந்து வீசத்தொடங்கியது.

### யப்பானியர் யார்?

இக்கேள்வியை ஒருயப்பானியனிடமேகேளுங்கள். "யப்பானியர் அரசகுடும்பத்திலிருந்து உதித்தவர்கள். அரசரோ ஒரு தெய்வப்பிறவி. இதுதான் ஷின்ரோயிஸம்எனும் எங்கள்வேதத்தின்போதனை" எனப் பதிலிறுப்பான். எவ்வளவோமுற்போக்கும், நாகரீகமும்படைத்தமக்கள் இதுபோன்றபுராணங்களை எப்படிநம்புகின்றனர்என்பது வியப்பானகாரியமே.

### இரண்டே கோட்பாடுகள்

மிக்காடோவின் (சக்கரவர்த்தியின்) மூதாதையரைத்தொழுவதும், இயற்கையைவணங்குவதுமே ஷின்ரோயிஸத்தின் முக்கியஅனுசாரங்கள். வேதநூல் என்பது கிடையாது, புராணத்திரட்டுகள் வேண்டுமானல் நிறைபஉண்டு. உன்னதகடவுட்கொள்கையோ, மனிதஇயல்பு, மனிதனின்கதி, மறுவாழ்வுமுதலிய அம்சங்களைப்பற்றியோ யாதொருபோதனையும்கிடையாது விசுவசிக்கவேண்டிய "சத்தியங்களும்" இரண்டேதான். (1) உலகின்எட்டுமூலைகளும் யப்பானின் குடைநிழலில் தலைபணியும்படிசெய்யவே யப்பானியர் படைக்கப்பட்டுள்ளனர் என்பது ஒன்று. (2) யப்பானியசக்கரவர்த்திகள் தெய்வீகப்பிறவிகள்; அழியாவாழ்வுவாழும் அவர்களதுமூதாதையரின்விருப்பத்திற்கும், கட்டளைகளுக்கும் இணங்கியே அவர்கள் அரசுசெலுத்துகின்றனர்என்பது மற்றொன்று. சரித்திரநிபுணர் வண.ரூஸ்ஸெல் சுவாமிகள் கூறுவதுபோல, இவ்விருஅம்சங்களே ஷின்ரோயிஸத்தின் இருவிழிகள். யப்பானியரின் [illegible] அனைவர்க்குமிஞ்சியதேசப்பற்று, அகங்காரம், நெஞ்சழுத்தம்முதலிய குணங்களுக்குக்காரணம் இத்தகைய மதக்கோட்பாடுகளே.

### புராணங்கள்

நாட்டின்நோக்கங்களும், அபிலாஷைகளும் யப்பானியபுராணங்களைஒட்டியேஎழுந்துள்ளன. அரசியல்சட்டங்களும்கூடப் புராணங்களை அடிப்படையாகக் கொண்டுஅமைக்கப்பட்டுள்ளன. யப்பானியஅரசரின்வம்சம் ஆதிதேவர்களுடன் தொடர்புஉள்ளதாம். சரித்திரகாலத்திற்குமுன்பே தொடங்கியவம்சம் வாழையடிவாழையாக இன்றுவரை தொடருவதாகப் புராணங்கள் கூறுகின்றன. தெய்வீகப்பிறவிகளாகிய இவ்வரசர்களுக்காக உயிர்துறப்பதை ஓர்புண்ணியமாக அவர்கள்கருதுகிறார்கள். ரூஷியா, சீனா, கோறியா, மஞ்சூரியாநாடுகளுடன் போரிட்டதும், இரண்டாம்உலகயுத்தத்தில் கலந்துகொண்டதும் சக்கரவர்த்தியின்செல்வாக்கைப்பரப்பவேண்டும்என்ற மதவைராக்கியத்தினலேயே.

யப்பானிய புராணக்கதைகள் உண்மையாகவே நடந்தசம்பவங்கள்எனப் பாமரமக்கள் நம்புகின்றனர். இஜனகிஎன்றதெய்வமும், இஜனமிஎன்றதேவதையும் ஜப்பான்தீவுகளையும், பலதேவர்களையும் பெற்றெடுத்தனராம். இஜனமி பிரசவத்தில் இறந்துபோக, அவளைத்தேடிக்கொண்டு பாதாளம்சென்றான் இஜனகி. அவளைக்காணமல் ஆறுதலற்று உலகிற்குத் திரும்பினன். பாதாளத் தீட்டுகளை நீக்க ஒருநதியில் நீராடும்சமயம் எப்படியோ மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தான். சூரியதேவதை அமாடெராசு, சந்திரதேவதை ட்ஸூகியோமி, சமுத்திரதேவன் சுசானூஎன்றஅந்த மூன்றுகுழந்தைகளும் சீக்கிரமே வளர்ந்தன. இஜனகி சூரியதேவதையாகிய அமாடெராசுவுக்கு யப்பான்தீவுகளை வழங்கினன். இத்தேவதை நெல்சாகுபடிசெய்யவும், பட்டுநூற்கவும், புடவைநெய்யவும் யப்பானியரைப்பயிற்றுவித்தாள்.

அவள்தமையன் சுசானூ குறும்புக்காரன். அவனது தொல்லைகளைத்தாங்கமுடியாமல் சுவர்க்கலோகத்தினர் அவனைவிரட்டி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாயத்திலுள்ள பட்சிகளைப் பாருங்கள்.

I. இடம்: கலிலேயாவில் தெருவை யடுத்த ஓர் வீட்டுமுற்றம்.

[ கமலாவும் லீலாவும் ]

**கமலா :** (வீட்டின் பக்கம் பார்த்து) புஷ்பம் வாசீக்கிரம், நேரமாய்விட்டது.

**புஷ்பம் :** (உள்ளேயிருந்து) சற்றுப் பொறுங்கள். இதோ வருகிறேன்.

(லீலா மெதுவாகச் சற்றுப் பின் தாங்கி நடக்கிறாள்)

**கமலா :** என்ன லீலா, கொஞ்சம் வேகமாக நடந்துவாவேன். நாம் அங்கே போவதற்குள் அவர் போய்விடுகிறாரோ என்னமோ.

**லீலா :** ஆமா, நீ என்னதான் சொல்ல மாட்டாய்? உனக்குத்தான் சீலைநல்லது கிடைத்துவிட்டதே. இந் தக்கந்தையைப் போர்த்திக்கொண்டு வெளியேபோக எனக்கு வெட்கமாக யிருக்கிறது.

**கமலா :** சீலை இல்லை, இல்லை யென்று கண்ணீர்வடித்து என்னபிரயோசனம்? நம்முடைய பணநிலைமையையும் கவனிக்கவேணு மல்லவா? அப்பா எவ்வளவுதான் கஷ்டப்படமுடியும்? புதுப்புடவை இல்லாவிட்டால் தான் என்ன? உனக்குத்தான் கம்மல் வாங்கியிருக்கிறதே. எனக்கு கம்மலும், காப்பும் ஒன்றுமேயில்லை.

**லீலா :** காப்பும் கம்மலும் மட்டும் இருந்தால் போதுமோ? வேறு ஒன்றும் தேவையில்லையா? நல்ல சீலை இல்லாததினால்தான் என்னைக் கலியாணத்திற்குக் கூட்டிக்கொண்டுபோகாமல் நீ மாத்திரம் போனாய்.

**கமலா :** என்ன, தூரநடக்கும் கலியாணத்திற்குவீட்டிலுள்ளஎல்லோரும் போகமுடியுமா? உனக்கு அதுகவலை. எனக்கு உல்லாசப்பிரயாணத்திற்குப் பணம்வேண்டும். அதை நாளைக்குக் கட்டாயம்கொடுக்க வேண்டும். அது எப்படிக் கிடைக்குமோவென்று இருக்கிறேன்.

**லீலா :** சரி, நேரமாகுது என்று சொல்லிவிட்டு இப்பொழுது இங்கேயே நிற்கிறாயே!

**கமலா :** புஷ்பமும்அவரைப்பார்க்க வருகிறேன் என்று சொன்னாள். அவளையும் கூட்டிக்கொண்டு போவோம். (வீட்டை நோக்கி) புஷ்பம்! புஷ்பம்!

**புஷ்பம் :** (வெளியே வருகிறாள்) இதோ வந்துவிட்டேன்.

**கமலா :** ஏன் இவ்வளவு நேரம்? இதற்குள் பிரசங்கம் தொடக்கி முடித்திருப்பாரே.

**புஷ்பம் :** அடுத்தமாதம் பரீட்சை வருகிறதல்லவா; எனக்குப் பரீட்சை எழுதுவதற்குப் பவுண்டன்பேனா இல்லை. ஒருபுதுப்பேனா வாங்கித்தரும்படி எங்கள் அண்ணனுடன் சண்டைபோட்டுக் கொண்டே இருந்தேன்.

**கமலா :** சரி, சீக்கிரம் வாருங்கள் போவோம்.

**புஷ்பம் :** ஏன் இவ்வளவு அவசரம் அக்கா. அவர் இன்னும் வந்திருக்க மாட்டார். வந்திருந்தால்தா னென்ன. பிரசங்கத்துக்குக் கொஞ்சம் பிந்திப் போனால் என்ன மூழ்கிப்போச்சுது.

**கமலா :** யேசுநாதரை உனக்குத் தெரியாது. தெரிந்தால் இப்படிப்பேச மாட்டாய். அவருடைய பிரசங்கம் கேட்கக்கேட்க இனிமையாயிருக்கும். நம்ம ஆசாரியர்கள்மாதிரி அவர்பேச மாட்டார். அவரைச்சுற்றிக் கூட்டம் நிறைய இருக்கும். வேகமாக நடவுங்கள் போவோம்.

( திரை )

II. இடம்: ஓர் மலைச்சாரல்

[ யேசுநாதர் ஓர் பாறைமேல் வீற்றிருக்கிறார். அவரைச்சுற்றிலும் சனக் கூட்டம். புஷ்பமும், கமலாவும், லீலாவும் கூட்டத்திலிருக்கிறார்கள். மரக்கொம்புகளில் பட்சிகள், சுற்றிலும் பசும்புல், புஷ்பங்கள் நிறைந்த செடிகள் ]

**யேசுநாதர் :** ஆகாயப்பட்சிகளைப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை. அறுக்கிறதுமில்லை. ஆகிலும் உங்கள் பரமபிதா அவைகளைப் போஷித்து வருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்களல்லவா? மேலும் யோசித்துக் கவலைப்படுவதினால் தன் உயரத்துக்கு ஒரு முழம்கூட்ட உங்களில் எவனால் கூடும்? அன்றியும் உடைக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல்வெளிகளிலுள்ள லீலிப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. ஆயினும் சலமோன் முதலாய்த் தனது சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலெங்கிலும் உடைபூண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இன்றைக்கு இருந்து நாளைக்குஅடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குச் சர்வேசுரன் இத்தன்மையாய் உடைஉடுத்துவித்தால், அற்பவிசுவாசமுள்ளவர்களே, உங்களுக்கு எவ்வளவோ அதிகமாக உடையளிப்பார்.

**லீலா :** அக்கா, அவர் சொன்னதைக் கேட்டாயா? எவ்வளவுஉண்மை.

**கமலா :** லீலிப்பூ எவ்வளவு அழகாயிருக்கிறது! அதை நாம் கவனிக்கிறதேயில்லையே. அவர் அதை எவ்வளவுஅழகாய்எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

**யேசு :** (தொடர்ந்து சொல்லுவார்.) ஆதலால் என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம், அல்லது எதை உடுத்திக்கொள்ளுவோம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில், இவைகள் எல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்கள். உங்கள் பிதாவோ என்றால் இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவையென்றறிவார்.

**சனங்களில் ஒருவர் :** கேட்டீர்களா, அவர் சொல்லுவதை. நாமும் அதில்லை இதில்லைஎனச் சஞ்சலப் பட்டுக்கொண்டே யிருக்கிறோம். அதெல்லாம் நமக்கு வேண்டியது எனக் கடவுளுக்குத்தானே தெரியுமே.

**இன்னொருவர் :** அவர் சொல்லுவதெல்லாம் எவ்வளவு உண்மை! மற்ற ஆசாரியர்களைப்போல அவர் பேசுகிறதில்லையே. ஓர்வித அதிகாரத்துடனல்லவா பேசுகிறார்.

**யேசு :** ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும்அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள். அப்போ இவைகளெல்லாம் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும்.

( திரை )

III

[ இடம் : லீலா, கமலா இவர்களின் வீடு ]

(அவர்களுடையதாய் வீட்டுவேலை செய்து கொண்டிருக்கிறாள்—லீலாவும், கமலாவும், இராசாவும் உள்ளே நுழைகிறார்கள்)

**லீலா :** அம்மா, நான் இனிமேல் ஒருக்காலும் புதுச்சீலைக்காக அழமாட்டேன்.

**தாய் :** ஆ, இதுதான் நல்லபிள்ளை.

**இராசா :** அம்மா, லீலாமனந்திரும்பி விட்டாள். நானும் இனிமேல் அது வேண்டும், இதுவேண்டும் என்று அழமாட்டேன்.

**தாய் :** என்னசங்கதி, இராசா? இன்றைக்கு எல்லாரும் இப்படிப்பேசுகிறீர்களே!

**லீலா :** யேசுநாதரின் பிரசங்கத்தைக் கேட்டோம். அவர் என்னசொன்னாரென்று அக்காளிடம் கேட்டுப் பாருங்கள்.

**கமலா :** அவர் சொன்னார்: நமக்கு என்னென்ன வேண்டுமென்று சர்வேசுரனுக்குத் தெரியும். அவர்தான் இந்தப் பூமியிலுள்ள சகலத்தையும் காப்பாற்றிவருகிறாராம்.

**லீலா :** எல்லாத்தையும் நமக்காகச் சிருஷ்டித்து வைத்திருக்கிறாராம்.

**இராசா :** அடைக்கலங்குருவிகளைப் பற்றிக்கூடச் சொன்னார். அது விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. என்றாலும் அது சீவிக்கிறதே. நானும் அடைக்கலங் குருவிகளைப்பார்த்துத் தானிருக்கிறேன்.

**கமலா :** இந்த ஆகாயப்பறவைகளுக்கும், வயலில்வளரும் காட்டுப் புல்லுக்கும் உணவும் உடையும்கொடுக்கிறகடவுள் மக்களுக்குவேண்டியதைக் கொடுக்கமாட்டாராஎன்று கேட்டார்.

**லீலா :** நமக்கு என்னென்ன வேண்டுமென்று கடவுளுக்கு நன்றாகத் தெரியுமாம். அதனால் கவலைப்படாதீர்கள். சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவரது நீதியையும் முந்தமுந்தத்தேடுங்கள். இவைகளெல்லாம் உங்களுக்குக் கிடைக்குமென்றார்.

**தாய் :** அவர் சொன்னது உண்மையே. பெற்றவள் போற்றமாட்டாளா? அதேபோல நம்மைச் சிருஷ்டித்தகடவுள் நம்மைக் காப்பாற்றமாட்டாரா? நாம் செய்ய வேண்டியதை நாம் செய்வோமானால் மீதியை அவர் பார்த்துக் கொள்ளுவார்.

( திரை )

( தி. இ. தூதன் )

---

## இஸ்பிரீத். திரு. பின்வரும்
# 17-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
( மத். 22 : 34—46 )

அக்காலத்தில் பரிசேயர்கள் யேசுநாதரிடம்கூடி வந்தார்கள். அவர்களில் நீதிசாஸ்திரியாகிய ஒருவன் அவரைச் சோதிக்க: குருவே, தேவகட்டளையிற் பெரிதான கற்பனை எது? என்று கேட்டான். யேசுநாதர்அவனுக்குத் திருவுளம் பற்றினதாவது: உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழுஇருதயத்தோடும், உன்முழு ஆத்துமத்தோடும், முழுமனதோடும் சிநேகிப்பாயாக; பிரதானமும்முதன்மையுமான கற்பனை இதுவே. ஆயினும், உன் அயலானை உன்னைப் போல்சிநேகிப்பாயாகவென்கிற இரண்டாங் கற்பனையும் அதற்கொத்ததாம். இவ்விரண்டு கற்பனைகளிலும் வரிவேத கட்டளை நூல் முழுமையும் தீர்க்கதரிசிகளின் நூற்களும் அடங்கியிருக்கின்றன என்றார். மீளவும், பரிசேயர் கூடியிருக்கும்போது யேசுநாதர் அவர்களை வினவினதாவது: கிறீஸ்துநாதரைக் குறித்து உங்களுக்குத்தோன்றுகிறதென்ன? அவர் யாருடைய குமாரன்? என்று கேட்க, அவர்கள்: தாவீதனுடைய குமாரன் தான் என்று சொன்னார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் அவரை ஆண்டவரென்று சொல்லுகிறதெப்படி? 'நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்கு மணையாகப்போடுமட்டும், நமது வலப்பாரிசத்தில் உட்காருமென்று' ஆண்டவர் என் ஆண்டவருக்குத் திருவுளம் பற்றினாரென்றுசொல்லியிருக்கிறாரே. ஆகையால், அவரைத்தம் ஆண்டவரென்று தாவீது சொல்லியிருக்க அவர் இவருக்குக் குமாரனாக இருப்பதெப்படி? என்றார். அதற்கு மறுமொழியாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையாவது சொல்லக்கூடவுமில்லை; அந்நாள் முதல் அவரை மறுபடி கேள்விகேட்கஎவனுந் துணியவுமில்லை.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின்
# மூன்றாஞ் சபை

ஐப்பசிமாசம் 4-ந்திகதி செவ்வாய்க் கிழமை எமது பரிசுத்த பிதாவாகிய அர்ச். பிரான்சீஸ்கு அசிசியாரின் திருநாள் மகோற்சவமாதலால் அன்று திருவிருந்தருந்தி எல்லாச்சடங்குகளுக்கும் நேரத்தோடு சமுகங்கொடுத்து அந்தத் திருநாளை வெகுபத்திச் சிறப்பாய்க் கொண்டாடுமாறு சகோதரர்களெல்லோரும் வெகு விநயமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அன்று காலை 6-15 மணிக்குத் திவ்விய பூசைப்பலி அவர்களுக்காக ஆசனக்கோவிலில் நிறைவேறியவுடன் பொதுப்பாவ மன்னிப்பு அருளப்படும். மாலை 5-00 மணிக்கு வழமையான மாதாந்தகூட்டம் அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். அப்பொழுது சிலசகோதரர் நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள், சிலர் வாக்குத்தத்தம் எடுப்பார்கள். ஈற்றில் திருநாளானது 7 மணிக்குத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் முடிவாகும். ஐப்பசிமாதம் பின்வரும் திகதிகளில் சகோதரர்கள் பரிபூரணபலன்களை அடையலாம்:— 2, 4, 5 (2), 6 (2) 10, 11, 12, 19, 26, 30, 31 (2) நிபந்தனைகள்: பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணைபெறல், ஆசனக்கோவிலைச் சந்தித்தல், அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காகமன்றாடல். பாப்பானவருடைய ஆசீர்வாதமும் அருளப்படும்.

A. S. FRANCIS OF MARY
for Director.

---

## நகைச்சுவை

**உபாத்தியாயர்**—(வகுப்பிலே பிறர்சிநேகத்தைப்பற்றிப் பேசினர். கடைசியாக வில்லியை நோக்கி) ஓர்பையன் கழுதை ஒன்றை அடிக்கிறதைக் கண்டால் — கண்டதும் நான் ஓடிச்சென்று அவ்விதம் கழுதையைஅடியாது அவனைத்தடுத்து விட்டால் — அதை என்ன புண்ணியமென்று சொல்லுகிறது?

**வில்லி**—அதைத்தான் சகோதரபட்சம்என்று சொல்லுகிறது ஐயா!

* * *

**டக்றர் :**—(வீட்டில் பிரவேசித்ததும் நோயாளியைப் பார்த்து) ஓ! இன்றைக்கு நீ அதிகம் சுகமுள்ளவனாய்க் காணப்படுகிறாய்.

**நோயாளி :**—ஆம் சிலவேளை அப்படியிருக்கலாம். ஏனெனில், நீங்கள் மருந்துப்போத்தலில் எழுதிக்கொடுத்திருந்தபடி நான் மெத்தவும் கவனமாய்நடந்து கொண்டேன்.

**டக்றர் :**— (சிறுகயோசித்து விட்டு) மெத்தநல்லது, மருந்துப்போத்தலிலே அப்படியெல்லாம் என்ன எழுதியிருந்தது? எடுத்துவந்து காட்டுபார்க்கலாம்.

**நோயாளி :**—இதோ பாருங்கள்! போத்தலை நன்றாய் அடைத்து வைத்துக்கொள்ளென்று எழுதியிருக்கிறது. அப்படியே செய்திருக்கிறேன்.

---

❀ முப்பது லட்சம் குடிசனங்களைக் கொண்ட அயர்லாந்துதேசம் வேதபோதக அலுவலில் முன்னணியில் நிற்கின்றது. அது சனத்தொகையில் குறைந்திருப்பதாயிருப்பினும் உலகிலுள்ள வேதபோதகர்களில் பண்ணிரண்டுபேரில் ஒருவர் அயர்லாந்தைச் சேர்ந்தவர்களே.

❀ அணுக்குண்டு இரகசியம் ருஷியாவுக்குத்தெரிந்துவிட்டதென்றசெய்தி வெளியானதும் அடுத்தஒன்றிரண்டு வருடங்களுள் மூன்றாவது உலகயுத்தம் ஏற்பட்டேதீருமென்ற அபிப்பிராயம் பிரித்தானியதேசமெங்கும் பரந்துவிட்டது. பத்திரிகைகளெல்லாம் இந்த அபிப்பிராயத்தை ஆதரித்தே எழுதியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதா தந்த மணிமாலை

— (கும்மிப்பண்) —

1

தங்க மணிமாலை அங்கமேல் ஆயிரம்
தங்கியே யழகு தந்திடினும்
அங்கை யினிற்செப மாலையொன் றில்லையேல்
அன்பரே உண்டோ அழகெமக்கு?

2

முத்துவை டூரியம் பச்சை மரகதம்
முச்சுடர் மாமணி மாலைபல
எத்தனை யும்பரி சுத்தசெ பமாலைக்
கீடாகுமோ தாயார் சூடுவரோ?

3

மல்லிகை ரோசாவெண் முல்லைசம் பங்கியும்
மற்றும் பரிமள மாலைகளும்
சொல்லள வில்லாச் சுகந்தம் கமழ்ந்திடும்
சொர்க்கலோ கமணி மாலையாமோ?

4

பத்தி ரசச்சுவை சொட்டிவ ழிந்திடைம்
பத்திமூன் றுமலர் வைத்தி ழைத்த
முத்தி நெறிஏணி யீதல்ல வோஎங்கள்
மூவுல கராணி சூடுமணி

5

தாயார் தரிசனம் தந்து பலதரம்
தன்மையாய்க் கேட்டது எம்மாலை?
சேயார் தினந்தினம் ஓதிப் பலன்பெறச்
சித்த மிசைந்த செபமாலை

6

மாமடு வாழ்மரி தாய்பதி நீங்கையில்
மைந்தர் கைதந்தது மிம்மாலை
நாமவர் சந்நிதி செய்த பொருத்தமும்
நாளும் செபித்திட இம்மாலை

7

பிரியதத் தத்தினல் பூரண முற்றவர்
பெண்களுக் குள்ஆசி பெற்றவராம்
மரியன்னை வாழ்த்துப் புகல்பொன வெங்தூர்சொல்
மந்திர ஞான மணிமாலை

8

சாமிநா தர்க்கன்று தாய்மரி தந்தருள்
சங்கீதம் பேசு மிசைமாலை
பூமிசை யின்னல்கள் போக்கிப் புதுமைசெய்
பொன்னு ரிரசம் பொழிமாலை

9

இப்போதும் எப்போதும் எங்கள் மரணத்தும்
ஏற்ற துணைகொள் படைக்கலமாய்
தப்பா தடைக்கலம் தந்தெமைக் காப்பது
தாயார்கை தந்தஇம் மாலையன்றோ!

10

தேடிய ஆஸ்தி திரவியம் யாவுமே
தேங்கிச் சிறந்து பொலிந்திடினும்
நாடிய இச்செப மாலையல்லால் ஒன்றும்
நம்மொடு வந்திடா தந்தியிலே

11

மாலை தவறாது மாதா பதம்செப
மாலை சமர்ப்பியும் அன்பர்களே!
மாலை மரணத்தில் ஆறுதல் கண்டுவான்
மாலை புகுந்து மகிழ்வீர்கள்!

12

ஐப்பசி மாதத்தில் அன்னையர் பாதத்தில்
அன்புடன் சேர்ந்து அநுதினமும்
தப்பா தவள்தந்த மாலை சமர்ப்பிக்கத்
தாசர்நாம் முன்னணி சேருவமே

வங்காலை S. பர்ணபாஸ்

---

❁ இரும்புத்திரை நாடுகளிலிருந்து மாதந்தோறும் இரண்டாயிரவருக்கு மேற்பட்டசனங்கள் மேல்நாடுகளுக்கு ஓடித்தப்புவதாக ஜெனிவாநகரிலுள்ள ஐ. நா. ஸ்தாபன பொருளாதார—சமூக கொம்மிஷனுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இவர்களைத்தடுக்க இரகசியப்பொலிசாரலும், 20 அடி உயரமான அரண்களைக் காவல்செய்யும் ஆயிரக்கணக்கான போர்வீரர், பொலிசாராலும் முடியாமற்போய்விட்டதாம்.

❁ ஒல்லாந்துதேச ஹார்லெநகர் அதிமேற்றிராணியாரான ஹூய்பேர்ஸ் ஆண்டவர் லூர்துதிருப்பதியின் வைத்திய கருமசாலைக்கென்று சிறந்த எக்ஸ்றேகருவி ஒன்றை உபகரித்திருக்கின்றார். தனது இனத்திலே இது அதிகம் முதன்மையானதாகும். இக்கருவி ஸ்தாபிக்கப்பட்டதோடு லூர்துபதிஆஸ்பத்திரி பிரான்சின் சிரேஷ்டமான ஆஸ்பத்திரிகளில் ஒன்றாய் விளங்குகிறது.

## பொதுவர்த்தமானம்

### யூதர்களும் ஜெருசலேமும்

ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பொதுமகாநாட்டுக்குப் பலஸ்தீனவிலே யூதர்களின் இஸ்ரேயேல்அரசாங்க தூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்துச் செல்லும் அதன் அயல்நாட்டு மந்திரியான மோஷே ஷறெற்என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை அங்கிருந்து புறப்படுகையில் பேசியவிடத்து: "ஜெருசலேமிலே சர்வதேச ஆட்சியொன்றை அமைப்பதற்கான பலஸ்தீனச் சமரச கொம்மிஷனின் திட்டம் அநீதியானதும், அனுபவசாத்தியமற்றதுமெனக் காட்டி என்னால் ஆனதெல்லாம் செய்வேன்; எல்லாச் சமயங்களினதும், சமயஸ்தாபனங்களினதும் சுதந்திரங்களையும், நலன்களையும் பூரணமாகப் பாதுகாக்கக்கூடிய ஓர்வழிவகையைச் செய்வது சாத்தியமாகுமென்பதை ஐக்கிய நாடுகளின்ஸ்தாபனம் திருப்தியடையத் தக்கவிதமாய் இஸ்ரேயேல் தூதுக்கோஷ்டி நிரூபித்துக்காட்டும்; யூதஜெருசலேமின் சுதந்தரத்திலும், இஸ்ரேயேலிலிருந்து பிரிக்கமுடியாத தொடர்புகளிலும் தீண்டாமலே இது செய்யப்படமுடியும்" எனக் கூறியிருக்கின்றார்.

### பொதுவுடைமைப்பேராபத்து

அமெரிக்கஐக்கியதேச றிப்பப்ளிக் படக்காட்சிக் கம்பெனியானது அத்தேசத்திலே கம்யூனிஸத்தை அழித்தொழித்துவிடுவதற் குதவியாய்க் குறைந்தபட்சம் ஐந்துலட்சம் டலர் செலவிடுமென்று அக்கம்பெனியின் தலைவரான திரு. ஹேர்பேட் யேற்ஸ் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். "பொதுவுடைமைப் பேராபத்து" என்ற சினிமாப்படத்தின் மூலம் கம்யூனிஸம்பரவுவதை எடுத்துக்காட்டி விளம்பரப்படுத்துதற்கென்று அத்தேச முழுவதிலும் அக்கம்பெனி செலவிடவிருக்கும்பணத்தின்ஆரம்பதொகையே இந்த ஐந்துலட்சம்டலருமாகும். இந்தப்படத்துடன் திரு. யேற்ஸ்அவர்கள் அத்தேசத்திலுள்ள 32 பிரதான நகரங்களை நேர்முகமாகத்தரிசித்து, அந்நகர்களிலே கூடியதொகையான சனங்கள் அப்படக்காட்சியைப் பார்த்துப் பேராபத்துகளைத் தெளிந்துகொள்ளுமாறு அவர்களையெல்லாம் தூண்டிவிடுவார். இப்படத்தைஇதுவரை காட்டியதின்பயனக தனிப்பட்டவர்களும் ஸ்தாபனங்களைச்சேர்ந்தவர்களும் ஏலவே ஒன்றாகத்திரண்டு கம்யூனிஸத்தை எதிர்ப்பதிலே ஐக்கியமுன்னணியை ஆக்கியிருப்பதாக அவர்கூறுகின்றார். சினிமாப்படச்சரித்திரத்திலேஇப்படத்தை எங்கெங்கும் அதிகமாகக்காட்டவேண்டுமென்பதே அவருடையகருத்தாகும்.

### கமவீரர் இராஜாஜி

இந்தியமகாதேசாதிபதியாகிய இராஜாஜி அவர்கள் உணவுஉற்பத்திவிஷயமாய்ச் செய்த தமது சொந்தமுயற்சியின்பயனக அரசாங்கமாளிகையைச் சேர்ந்ததோட்டத்தில் செய்யப்பட்ட பயிர்கள் இப்பொழுது போதியபலனை அளித்திருக்கின்றன. சென்றசிலமாதங்களிலே அத்தோட்டத்தில் விளைந்த விளைபொருட்கள்மூலம் அரசினருக்கு 8,000 ரூபாகிடைத்திருக்கிறது. இவ்வருடக்கடைசிக்குள் 25,000 ரூபா கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது வகுக்கப்பட்டுள்ள திட்டம் அபிவிருத்திசெய்யப்படின் அரசாங்கமாளிகைத் தோட்டங்களில் கமஞ்செய்வதன்மூலம் மகாதேசாதிபதி வருடம்ஒன்றுக்கு 50,000 ரூபா சம்பாதிக்கமுடியுமாம். இதனல் மாளிகைப்பூங்காவனத்துக்குஒருஇடையூறுமில்லை.

### மோட்டர் பொருட்காட்சி

உலகின்மகாப்பெரிய மோட்டர் பொருட்காட்சியொன்று லண்டன்மாநகரிலே நேற்றுப்புதன்கிழமை ஆரம்பமாகியிருக்கிறது. இதுஓர் சர்வதேச [illegible]ாகும். வருகிறஐப்பசி மாசம் 8-ந்திகதிவரையிலே நடந்தேறவிருக்கிறது. உலகில் கார்கள், றக்குகள், மோட்டர்வள்ளங்கள், எஞ்சின்கள், பஸ்கள்ஆதியன செய்வதில் ஈடுபட்டுள்ள ஐஞ்னூற்றுக்குமேற்பட்ட கம்பெனிகள் தங்கள்பொருட்களைக் காட்சிக்குவைத்திருக்கின்றன. ஐந்துலட்சம்சதுரஅடிகொண்ட மைதானத்தில் நடந்தேறும்இக்காட்சியை உலகின்நாலுபகுதிகளையும் சேர்ந்தவர்களாய் ஐந்துலட்சம்பேருக்கு மேற்பட்டவர்கள் கண்டுகளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

முதலாவது வருட
## மரண ஞாபகம்

மன்னார் டிஸ்திறிக் கோட்டுச் சக்கிடுத்தாராயிருந்து காலஞ்சென்ற
**திரு. எஸ். அந்தோனிப்பிள்ளையின்**
— பாரியார் —
**வினிபிறெட் அந்தோனிப்பிள்ளை**
1948-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 7-ந்திகதி மரணமாயினர். இந்த முதலாவது வருடஞாபகத்தின்போது பிறர்சிநேகத்தைமுன்னிட்டு இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுங்கள்.

இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அடுத்துநிகழும் ஐப்பசிமாதம் 7-ந்திகதி காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் பரிசுத்த அடைக்கலமாதாவின் ஆலயத்திலே ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

கவலைகொண்டுள்ள புதல்வர்

யாழ்ப்பாணம், 29-9-49.

---

### அர்ச். இசிதோர்திருநாள்
### முருங்கன்

முருங்கன்பதியிலே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் கிறீஸ்துதேவ இராசாவின் ஆலயத்தில் வழமைப்பிரகாரம் கமக்காரரின்பாதுகாவலராகிய அர்ச். இசிதோர்பெருநாள் இம்மதி 24-ம் 25-ந்தேதிகளில் நீக்கிலாப்பிள்ளை பிரகாசம்என்பவரால் கொண்டாடப்படலாயிற்று. முதல்நாள்சனிக்கிழமை கோயிலின் உள்ளும்புறமும் இயற்கை, செயற்கைப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்க, அன்றுமாலை வண. வில்லவராசிங்கம் குரவரால் வேஸ்பர் பாடிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாட்காலை 8-30 மணிக்கு அயற்கிராமங்களிலிருந்து வந்துகூடிய பெருந்தொகையான கிறீஸ்தவர்களால் ஆலயம் தேங்கியிருக்கச் சுவாமி அவர்களால்திவ்வியபாடற்பூசை நிறைவேறியது. அவ்வமையம்அவரால் செபத்தின் மகிமையைப்பற்றி அரியதோர் பிரசங்கம் செய்யப்படலாயிற்று. பெருந்தொகையினர் திருவிருந்தருந்தினர். திவ்வியபூசை முடிவெய்தியதும் அழகுறச்சிங்காரிக்கப்பெற்றிருந்த அர்ச்.இசிதோரின் திருச்சுரூபமானது மணிகள்ஒலிக்க, பத்தியருட்சியாகப் பக்தர்கள் செபமாலைசெபிக்க, பாடகர் குழாம் இசைக்க ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டுக் கோவில்வந்து சேர்ந்ததும், திவ்வியசற்பிரசாதஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பெற்று அன்னதானமளிக்கப்பட்டதுடன் திருநாள்முடிவெய்தியது.

முருங்கன்பாடசாலை
மாணவி

---

❁ 1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்திலே 30 லட்சம் யாத்திரிகர்வரையிலே ரோமாபுரியைத் தரிசிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுவதாய் வத்திக்கான் மதிப்பிடுகின்றது. இவர்களிலே 20 லட்சம் பேர்வரையில் இத்தாலியராயிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுவில்
அர்ச். செபமாலை மாதா
## திருநாள்

உடுவில் அர்ச். செபமாலைமாதாகோவில் திருநாள் வழமைப்பிரகாரம் புரட்டாதிமாசம் 25-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஐப்பசிமாசம் 2-ந்திகதி ஞாயிறுவாரம் காலை திவ்விய பூசையுடனும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும், பின் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் முடிவாகும். செபமாலைமாதாவின் பக்தர்கள் அனைவரும் வந்து செபமாலைத்தாயாரின் சலுகையை இரந்துபோகுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கட்டளைக்குரு.

## அறிவித்தல்

பாலயேசுவின் அர்ச். தெரேசம்மாள்
திருநாள்
சிவியாதெரு—யாழ்ப்பாணம்

இப்பேர்கொண்ட கோவில் திருநாள் சிலவசதிகுறைவின் நிமித்தம் இவ்வருடம் கொண்டாடப்படமாட்டாதென்று சகலரும் இத்தாலே அறிந்துகொள்வார்களாக!

கட்டளைக்குரு

கொழும்புத்துறை,
26-9-49.

## திருநாள் அட்டவணை

**1949-ம் ஆண்டு ஐப்பசி மாசம்**

| | | |
|---|---|---|
| 1 | சனி | அர்ச். ரெமிசியார், மே. |
| 2 | ஞா | இஸ்பி. ஆகமனத். பின்வரும் 17-ம் ஞாயிறு—காவலான சம்மனசுகளின் திருநாள் |
| 3 | திங் | குழந்தை யேசுவின் [illegible]ர்ச். தெரேசம்மாள், க.—அர்ச். செரார்த்தப்பர், ம. [து. |
| 4 | செ | அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார், |
| 5 | புத | அர்ச். பிலசிதப்பர், வே. |
| 6 | வி | அர்ச். புருனோ, வே. |


சத்தியவேத
## பாதுகாவலன்
1949-ம ஆண்டு
புரட்டாசி மாசம் 29-ந் திகதி


## செபமாலை மாதம்

நமதுமோட்சதாயாரை நாம் விசேஷவிதமாகச் சங்கித்து நேசித்து மன்றாடி மகிமைப்படுத்துவதற்கெனத் திருச்சபையாலே குறிக்கப்பட்டிருக்கும் மாசங்களில்ஒன்றாகிய ஐப்பசியிலே அவருக்குத்தோத்திரமாக நாம்அனுசரிக்கத்தக்க பத்திமுயற்சிகளில் அதிகஞ்சிறந்தது செபமாலைப்பத்தியே. சத்தியவேதவிசுவாசிகளும், குடும்பங்களும், சனசமுதாயங்களும், திருச்சபைமுழுவதுமே தற்கால அபாயங்களுக்குத்தப்பித் தேவாசீர்வாதங்களை நிறைவாகப்பெற்று, சுகிர்தஒழுக்கத்தில்சிறப்புற்று இரட்சணிய பெறுபேறை அடைந்துகொள்ளச் செபமாலைப்பத்தியானது சித்திகரமானஓர் ஏதுகரமாய் இருக்குமென்பதை நன்குணர்ந்தவரான பதின்மூன்றாஞ்சிங்கராயபாப்பானவர் ஐப்பசிமாசத்தைச் செபமாலைப்பத்திக்கெனநேர்ந்து, அதைஅனுசரிப்பாருக்கு விசேஷ ஞானப்பலன்களை அளித்துள்ளனர். அவருக்குமுன்னிருந்த பாப்புமாரும் செபமாலைப்பத்தியை மேலாகமதித்துவந்தார்கள் என்பதற்கு அவர்களதுவாக்குகளே சாட்சிபகருகின்றன.

"செபமாலையைச் செபிப்பவர்களுக்கு அதுவிலைமதிக்கரிய நன்மைகளை விளைப்பதாயிருக்கின்றது" என்றார் ஊர்பான்எனும் பாப்பானவர்.

"யேசுக்கிறீஸ்துநாதரையும் அவரதுமாதாவையும் ஒருங்கு மகிமைப்படுத்துகிற இச்செபமுறையானது கிறீஸ்துவேதத்தை அச்சுறுத்துகிற தீங்குகளைப் பலட்சயப்படுத்துவதில் சித்திகரமானது" என்றார் சிக்ஸ்துஸ்எனும் பாப்பானவர்.

"செபமாலைஎனும் உபாயத்தினாலே பிசாசு தோற்கடிக்கப்படுகிறது" என்றார் மூன்றாம்பவுல் எனும் பாப்பானவர்.

"செபமாலை பரிசுத்தரோமான் திருச்சபையின் ஆபரணம்" என்றார் மூன்றாம்யூலியஸ்எனும்பாப்பானவர்.

"சருவேசுரனுடைய கோபத்தை அமர்த்தவும், பரிசுத்த கன்னிமரியம்மாள் நமக்காகப் பரிந்துபேசும்படி இரந்துகொள்ளவும் செபமாலை ஏற்படுத்தப்பட்டது" என்றார் பதின்மூன்றாம் கிறகோரியார்எனும் பாப்பானவர்.

"செபமாலையானது பாவத்தை நிர்மூலமாக்குவதாயும், வரப்பிரசாதத்தைப் புதுப்பிப்பதாயும், தேவமகிமையை அதிகரிப்பிப்பதாயும் இருக்கின்றது" என்றார் பதினான்காம்கிறகோரியார் எனும்பாப்பானவர்.

"செபமாலை வரப்பிரசாதங்களின் பொக்கிஷம்" என்றார் ஐந்தாம்பவுல்எனும் பாப்பானவர்.

"செபமாலை கிறீஸ்துவேத விருத்திக்குத் துணைசெய்கின்றது" என்றார் எட்டாம்ஊர்பான் எனும் பாப்பானவர்.

"உங்கள் இருதயங்களிலே உங்கள்குடும்பங்களிலே, உங்கள் தேசத்திலே சமாதானத்தைக் கொண்டிருக்க விரும்பினால் ஒவ்வொரு சாயங்காலமும் ஒன்றுகூடிச் செபமாலை ஓதுங்கள்" என்று ஒன்பதாம்பத்திநாதர் எனும்பாப்பானவர் கூறியிருக்கிறார்.

திருச்சபையை ஆண்டுநடத்தத் தேவனால் நியமிக்கப்பட்ட பரிசுத்தபாப்புமாரினாலே அவ்வளவாகமதிக்கப்பட்ட செபமாலைப்பத்தியை நாமும்மேலாக மதித்துச் செபமாலையை நாடோறும் தவறாமல் ஓதிவருவோமாக. தேவதாயாரின்பத்தியுள்ளதாசர்கள்பாவனையாக நூற்றைம்பத்துமூன்றுமணிச்செபத்தை அனுதினமுஞ் சொல்லிக்கொள்ள முடியாவிடின் ஐம்பத்துமூன்றுமணிச்செபத்தையாவதுசொல்லிவரப் பிரமாணிக்கமாயிருப்போமாக. அதைத்தானுஞ் சொல்லக்கூடாதநாட்களிலே ஒருபத்துமணிச்செபத்தையாவது சொல்லாமல் கண்ணுறங்கப்போகாதிருப்போமாக. செபமாலைஓதும்போது அந்தந்தக்காரணிக்கத்துக்குப் பின்வரும் பத்துமணிச்செபவேளையிலே அந்தந்தக்காரணிக்கத்தில்அடங்கிய தேவஇரகசியத்தைத்தியானித்துக்கொள்ளும்படி கவனமெடுப்போமாக. தனிச்செபத்திலும் பொதுச்செபம் அதிகவல்லமையுடையதாலால் வீடுகளிலே குடும்பத்தவர்களுடனும், கோவில்களிலே ஏனைய கிறீஸ்தவர்களுடனும் ஒன்றுகூடிச் செபமாலைசெபபிக்க நம்மாற்கூடியபோதெல்லாம் பிரயாசப்படுவோமாக.

சங். எஸ். எவ். யோசேவ் விறதர்
அவர்களின்
## தேகவியோகம்

இலங்கைச் சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் அதிக காலங்கண்டாருள் ஒருவராய், அறிவானுபவமிக்காராய், தேவபத்தியில் பழுத்தபழமாய் விளங்கியிருந்த சங். விறதர் எஸ். எவ். யோசெவ் அவர்கள் விருத்தாப்பிய நோய்கண்டு வருந்திச் சென்ற 23-ந்திகதி வெள்ளிக்கிழமை இரவு 10-30 மணியளவில் கொழும்புத்துறைத் தாபனத்திலே காலஞ்செல்லலாயினரெனும் துயரசெய்தியறிந்து பெரிதும் மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 78.

விறதர் அவர்கள் 1871-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 27-ந்திகதி முல்லைத்தீவுப் பட்டினத்திற்பிறந்து, அங்கிருந்துவந்த சம்பத்திரிசியார்கலாசாலையில் ஆங்கிலமும், தமிழும்பயின்று சஞ்சூசையப்பர் சபையிலே ஓர்நவசந்நியாசராகச்சேர்ந்து, 1902-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 21-ந்திகதி முதல்வாக்குத்தத்தங் கொடுத்துச் சந்நியாசராயினர். அதன்மேல் இவர் மன்னாருக்கு அனுப்பப்பெற்று அங்கிருந்த சென்சேவியர்ஆங்கிலகலாசாலையிலே, வண. றெட்றிக்கோசுவாமியார் அதன்தலைவராயிருந்த காலத்தில் அக்கலாசாலைப் பொக்ஷகாரகவும், ஆசிரியராகவும் பத்தொன்பதுவருடகாலம் புகழ்ச்சிக்குரியவிதமாய்க் கடமைபார்த்துத் தமது சமூகதொண்டுகளாலும் பரோபகாரசேவைகளாலும் சாதியபேதம் சமயபேதமின்றியும், பெரியோர் சிறியோரென்ற வேற்றுமையின்றியும் மன்னார்வாசிகள் எல்லோராலுமே வெகுவாக அன்புபாராட்டவும், நன்குமதிக்கவும், கொண்டாடவும் பெற்றுவந்தார். அதனால் இவரது மரணசெய்தியை அறியவந்ததும் மன்னார்வாசிகளின் ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்து மன்னார்ப்பட்டினசங்க தலைவர் திரு. அழகக்கோன் அவர்கள் ஓர் செய்தி அனுப்பியதுடன் அடக்கச் சடங்கைச் சிறப்பாக நடத்தும்படியாகப் பணமும் அனுப்பிவைத்தனர். 1931-ம்ஆண்டு இவர் ஆசிரியபதவியிலிருந்து இளைப்பாறியதும் நமது அச்சியந்திரசாலையில் ஐந்துவருடகாலம் உபமனேஜராகவும், பின்னர் இளவாலையிலுள்ள தமதுசபை மடத்தில் அச்சபைச்சங்கத்தில் ஓர் அங்கத்தவராகவுமிருந்து கடைசியாகத் தள்ளாப்பிராயமுடையராய்க் கொழும்புத்துறையிலுள்ள தமதுசபை நிவாசத்தில் அந்தியகாலத்தைச் செபதபத்தில் செலவிட்டு வரலாயினர்.

விறதர்அவர்கள் திவ்வியபூசைப்பலியில் விசேஷபக்திபூண்டவர். அவர் கொழும்புத்துறைச் சந்நியாசமடத்தில் சஞ்சரித்திருந்த காலத்திலே அங்கு தினமும் எத்தனைபூசைகள் காணக்கூடுமோ அத்தனைபூசைகளையும் காணத் தவறமாட்டார். இவர் அதிகமான பூசைகள் காண்பதற்காகச்சிலகாலமாக அதிகாலையிலெழுந்து இருமைல்தூரம் பெருங்கஷ்டத்துடன் நடந்து ஆசனக்கோவிலுக்குவரும் வழக்கமுடையவராயிருந்தார். அப்போதும், பொதுவாக எப்போதும் அவர் கொண்டுதிரிவது செபமாலையேயாகும். இளைப்பாறிய பின்னர் அதிகமானநேரத்தைச் செபமாலைசெபிப்பதிலேயே செலவிட்டுவந்தார். உப்புஞ்சாதமும் அருந்தி ஒறுத்தல்செய்து வந்தாரென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மரித்தபின் இவர் சரீரம் கொழும்புத்துறைத்தாபன சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுச் சனிக்கிழமைகாலை அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக ஓர்துக்கப் பாடற்பூசை நிறைவேறியது. பிற்பகல் 4 மணியளவில் தாபன அதிபர் வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் இருதூவர்கள்சமேதராய்த் துக்க சங்கிதம் பாடிச்செல்ல, ஆசிரியகலாசாலை மாணவர் மாணவிகளும், சாதனுபாடசாலை மாணவர் ஆசிரியர்களும், கன்னிகாஸ்திரீமாரும், குருத்துவமாணவர்களும் செபங்கள்ஓதிச்செல்ல, மற்றும் ஆசிரியர்களும், பிரமுகர்களபலரும் புடைசூழ்ந்துசெல்ல, சரீரமானது ஆசனக்கோவில்கொண்டுசென்று அங்கே நமது முதல்மேற்றிராணியாண்டவர் பதினைந்துகுருவர்கள்சமேதராய்ச் சமுகமாயிருக்க, அந்திம திருச்சடங்குகள் நிறைவேறியதும் முன்சொன்னமேரையர்கச்சேமக்காலைகொண்டுசென்று பூமதானஞ்செய்யப்படலாயிற்று. இவரை இழந்து துன்புறுகின்ற சகோதர சந்நியாசர்களோடும், இனசனர் முதலானோருடனும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## சுதேசவர்த்தமானம்

### ஆசிரியர்களின் உபசரணை

யாழ்ப்பாணத் துணைமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவருக்கு யாழ்ப்பாணக் கத்தோலிக்க தமிழாசிரியர் சமூகம் நாளைநின்று வரும் 1-ந்திகதி சனிக்கிழமை நடாத்தவிருந்த வரவேற்பு உபசாணையானது, ஆண்டவர் அவர்களின் சகோதரரது எதிர்பாராதமரணத்தாலே பின்போடப்பட்டிருப்பதாக அறிகின்றோம்.

### புதிய வித்தியா தலைவர்

ஜிப்றோல்றரிலே வித்தியா தலைவராய் இருந்துவருகிறவரான டக்றர் எச். டபிள்யு. ஹவெஸ்அவர்கள் இலங்கைப் புதிய வித்தியாதலைவராகத் தெரியப்பெற்று, அப்பதவியைஒப்புக்கொண்டு சமீபத்திலே இங்கு வந்துசேரவிருக்கின்றார். இவர் லண்டன் சர்வகலாசாலையின் எம். ஏ., எம். எஸ்சி., பிஎச். டி எனும் பண்டித பட்டங்கள் பெற்றவர். இலங்கையிலே இவர் வித்தியாதலைவராகவல்ல, ஆனால் அரசினருக்கு வித்தியா ஆலோசகரென்றே அறியப்படுவாரெனத் தெரியவருகிறது.

### புதிய நீதியரசர்

இம்மாசம் 28-ந் திகதியோடு தமது உத்தியோகபதவியிலிருந்து இளைப்பாறியிருப்பவரான சங். கனகரத்ன நீதியரசரினிடமாகச் சொலிசிற்றர் ஜெனறலாய் இருந்துவருகிறவரான திரு. எம். எவ். எஸ். பிள்ளை, கே. சி. அவர்கள் சுப்பிறீங்கோட்டு நீதியரசராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். தற்போது ஐம்பதிவயசுடையவரான இவர் 1933-ம் ஆண்டு சுப்பிறீங்கோட்டிலே முடிக்குரிய ஓர்நியாயவாதியாக நியமனம்பெற்றார். 1935-ம் ஆண்டு நீதிப்பரிபாலன கொம்மிஷனின் காரியதரிசியாகக் கடமைபார்த்தார். புதிய அரசியல்திட்டத்தின்கீழ் முதல் சொலிசிற்றர் ஜெனறல் இவரே. சமீபகாலத்தில் இவர் அற்றேணி ஜெனறலாகவும் ஐக்கிங்காகக் கடமைபார்த்துவந்திருக்கிறார். 1948-ம் ஆண்டு மாசிமாதம் 18-ந்திகதி கே. சி. ஆக்கப்பெற்றார். இவர் கொழும்பிலுள்ள சென் பெனடிற் கல்லூரிப் பழைய மாணவர். ஓர்உத்தம கத்தோலிக்கர். முடிக்குரிய நியாயவாதியாக நெடுங்காலமிருந்து நீதிப்பரிபாலனத்திலே மிக்கான அனுபவம் வாய்ந்தவர்.

### மல்வத்தை ஓயாத்திட்டம்

இலங்கையில் மகாப்பெரிய நீர்மின்சாரதிட்டம் மல்வத்தைஓயாத்திட்டமாகவே இருக்குமென்று சொல்லப்படுகிறது. இதற்கான படங்கள் தற்போது அரசினரால் தயாரிக்கப்படுகின்றன. இதற்குப் பலலட்சக்கணக்கான ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. இது முற்றுப் பெறுமிடத்து கல்லோயாவிலும் அதிக வேகமானதாய் இருக்குமாம். இந்தவேலை அடுத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

து நிகழும் 1950-ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மன்னாருக்குச் சமீபமான இந்த மல்வத்தைஓயாத் தடாகம் பூர்த்தியாகுமிடத்து 2,80,000 ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சக்கூடிய தண்ணீரைக் கொள்ளக்கூடியதாயிருக்கும். இப்போதைய கணக்குப்படி மன்னார், வவுனியா, அனுராசபுர முழுடிஸ்திறிக்குகளுக்கும், கிளிநொச்சிக்குத்தானும் நீபமேற்றுதற்கும், மற்றும் கைத்தொழில்களுக்கும் போதிய நீர்மின்சார சக்தியை இது உதவக்கூடியதாயிருக்கும். இவ்வாறாக இத்திட்டம் வட, வடமத்திய மாகாணங்களின் பகுதிகளுக்கும், கல்லோயாத்திட்டம் கீழ்மாகாணம் முழுவதுக்கும், நோட்ரன்பிறிட்ஜ் திட்டம் மத்திய, மேல் மாகாணங்களுக்கும் குறைந்தசலாரிலே மின்சாரசக்தி உதவக்கூடியதாய் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## சொலிசிற்றர் ஜெனறல்

சுப்பிறீங்கோட்டு நீதியாசர்களில் ஒருவராக நியமனம் பெற்றிருக்கும் திரு. எம். எவ். எஸ். பிள்ளை, கே. சி. அவர்கள் அற்றேணி ஜெனறலாகக் கடமைபார்த்தபோது, சொலிசிற்றர் ஜெனறலாக இருந்துவந்த திரு. ஆர். ஆர். குறுசெற் தம்பையா அவர்கள் இப்பதவியில் நிரந்தரமாக நியமனஞ் செய்யப்படுவார்போல் இருக்கிறது. இவர் முடிக்குரிய பிரதம நியாயவாதியார்.

## வெங்காயக் கட்டுப்பாட்டுவிலை

ஈரவெங்காயம் விலைக்கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. ஈரவெங்காயத்துக்குக் கூடியவிலை குறித்து 1948-ம்ஆண்டு பங்குனிமாதம் 24-ந் திகதி விடுத்தஉத்தரவை உணவுவிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியான திரு. எம். எல். டி. கஸ்பேர்ஸ் நீக்கிவிட்டாரென்று சென்ற வெள்ளிக்கிழமை வெளியான கெசற்றிலே பிரசித்தமாயிருக்கிறது.

## ஆஸ்தான கவிகள் நியமனம்

தேசிய பாஷைகளைக் கௌரவிக்கும் பொருட்டும், இதுசம்பந்தமாய்ச் சுதந்திர இலங்கைமக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டும் இலங்கையிலே தமிழ், சிங்களப்பாஷைகளுக்கு ஆஸ்தானகவிகளைப் பிரதமர் நியமனஞ்செய்ய வேண்டுமென்று கேட்டுச் சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. குமாரசுவாமி அவர்கள் பிரதிநிதிகள்சபையிலே சென்றப் தன்கிழமை எடுத்தாண்ட பிரேரணை நிறைவேறலாயிற்று.

## கத்திச் சட்டம்

இலங்கைமுழுவதும் கத்திச் சட்டம் வருகிற ஐப்பசிமாதம் 1-ந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரவிருக்கிறது. இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான அங்குல நீளமுள்ள அலகுகளைக் கொண்ட கத்திகளை எவராவது வைத்திருப்பதும், எடுத்துச் செல்வதும் இந்தச் சட்டத்தினால் விலக்கப்பட்டிருக்கிறது.

## சுறமீன் எண்ணெய்

இலங்கையிலே அரசினர் தயாரிக்கும் சுறாமீன்எண்ணெய்க்கு இலங்கையிலும், ஏனையபிறநாடுகளிலும் ஏற்பட்டிருக்குந்தேவை அதிகரித்துக் கொண்டுவருவதால், இலங்கையில் சுறாமீன்பிடிதொழில் நடத்துவதுபற்றிக் கைத்தொழில்—கடற்தொழில் மந்திரிசபை ஆலோசித்துவருகிறது. மருந்தாகமாத்திரமன்றி உணவுச்சத்துகளைச் சமன்படுத்தவும் சுறாமீன்எண்ணெய் உபயோகிக்கலாமென இப்போது கருதப்படுவதாகவும், உலகில்கொழுப்புச்சத்து குறைவாயிருப்பதால் சுறாமீன்எண்ணெய்க்குள்ளதேவை அதிகரித்து வருவதாகவும், அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் மாதிரிகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அரசாங்க மருந்துத் தொழிற்சாலைத்தலைவர் கூறுகின்றார்.

## ஸ்ரீமான் ஜே. எல். ஸ்ரன்னிஸ்லாஸ் அவர்களின் தேகவியோகம்

அரசாங்கத்திலே தாம் பெருமையுடன்வகித்திருந்த பெரும்உத்தியோக பதவிகளாலும், கத்தோலிக்க திருச்சபையிலே தமது சகோதரர்மூவரும் வகித்திருக்கும் மகிமைவாய்ந்த உயர் பதவிகளாலும் இலங்கைமுழுவதுமே பிரஸ்தாபமாக அறியப்பெற்றிருந்தவரான ஸ்ரீமான் ஜே. எல். ஸ்ரன்னிஸ்லாஸ் அவர்கள் கொழும்பிலே ஓர் சத்திரவைத்திய சிகிச்சைக்குள்ளாய்க் காத்திராப்பிரகாரம் சென்ற 26-ந்திகதி திங்கட்கிழமை காலஞ்செல்லலாயினரெனும் துயரசெய்திஅறிந்து பெரிதும் மனம் வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்கு வயசு 64.

ஸ்ரீமான் ஜோண் லூயிஸ் ஸ்ரன்னிஸ்லாஸ்அவர்கள் காம்பன்வாசராய், உல்லெட்டியா உபாத்தியாயரெனப் பேராய் அறியப்பெற்றிருந்த ஸ்ரீமான் ஏ. ஜேக்கப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வர். யாழ்ப்பாணத் துணைமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களதும், இலங்கையிலே கிறிஸ்தியன்விறதர்மார் நடத்திவரும் கலாசாலைகளின் அதிபரான அதிசங். லூக் அவர்களதும், கொழும்பு சஞ்சூசைப் பர்கல்லூரியின் அதிபராக விளங்கும அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியவர்களினதும் அருமைச் சகோதரர். இவர் 1906-ம்ஆண்டு அரசாங்க கிளேறிக்கல்பரீட்சையில் அரங்கேறிப் பல்வேறு உத்தியோகபதவிகளும் சிறப்பாக வகித்திருந்து ஈற்றில் அரசாங்க பெரியதிறைசேரியில் பிரதம லிகிதராயினர். பின்னர் 1926-ம்ஆண்டு வைத்தியபகுதியின் உதவிக் கணக்கதிகாரியாகவும் ஐக்றிங்காகக் கடமை பார்த்துவந்தார். அதன்மேல் 1930-ம் ஆண்டு அரசாங்க பெரியதிறைசேரியின் இரண்டாவது உதவிக்கணக்கதிகாரியாகவும், பின்னர் அதிலிருந்து முதலாவது உதவிக்கணக்கதிகாரியாகவும், பிரதம உதவிக்கணக்கதிகாரியாகவும் உத்தியோக உயர்ச்சிபெற்றுக் கடைசியாக நிதி உபஅதிகாரியாக நியமனம்பெற்றுத் தமது கடமைகளைத் திறம்பாத பிரமாணிக்கத்துடன் ஆற்றிவந்து சிலகாலத்தின்முன் இளைப்பாறலாயினர். அங்ஙனம் இளைப்பாறிய பின்னரும் தேசியசேமிப்பு இயக்கத்திலே உதவிக்கொம்மிஷனராயிருந்து அந்தஇயக்கத்துக்கு மகத்தானசேவைகள் ஆற்றியிருக்கின்றார். அரசாங்க கடனுதவும் சங்கத்திலும் இவர் ஓர் அங்கத்தவராயிருந்துவந்தார். இவருக்கு மூன்று புதல்வர்களும், இரு புதல்விகளும் இருக்கின்றனர்.

இவரின் பிரேதசேமம் மறுநாள் செவ்வாய்க்கிழமை சாயந்தரம் சிறப்பாக நடந்தேறியது. இவரை இழந்து ஆற்றொணாத்துன்புறுகின்ற நாயகியோடும், பிள்ளைகளோடும், சகோதரரோடும், மற்றுமுள்ள இனசனரோடும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

---

❁ தங்கள் மடங்களைவிட்டு வெளிகொள்ளாது ஏகாந்த வாழ்க்கைநடத்திவருகின்ற சந்நியாசர், கன்னிகாஸ்திரீமாரும் பரிசுத்தவருடத்திலே அவற்றைவிட்டுவெளிகொண்டுபோய் ரோமாமாபுரியைத் தரிசிக்கப் பாப்பரசர்அனுமதியளிக்கலாமென்று வத்திக்கான் அதிகாரி ஒருவர்தெரிவித்திருக்கின்றார்.

❁ பலஸ்தீனாவிலே ஜெருசலேம் பகுதியில் நிரந்தரமான சர்வதேச ஆட்சிக்கும், பரிசுத்தஸ்தலங்களின் பாதுகாப்புக்குமான அனுபவசாத்தியமுள்ள ஓர் திட்டத்தை ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பொதுச்சபை அங்கீகரிக்க வேண்டுமெனச் சென்றபுதன்கிழமைக் கூட்டத்திலே அமெரிக்க இராச்சிய மந்திரியார் எடுத்துக்கூறியிருக்கின்றார்.

## சமாரித்த வம்மிசம்

சமீபத்திலே மூன்றுசமாரித்தகுடும்பங்கள் தாங்கள்தொன்றுதொட்டு வசித்துவந்த இடத்தைவிட்டு இஸ்ரேயேல்நாட்டில்வந்து குடியேறின. இத்துடன் கடந்த இரண்டாயிரம் வருடங்களாக ஒருதனித் தேசியஇனமாக இருந்துவந்த சமாரித்தசமூகமே மறைந்தொழிந்ததுஎன்று சொல்லலாம். நமதுதிவ்வியஇரட்சகர் தமது பிரயாணங்களின்போத, ஒருகிணற்றண்டை சற்றுஓய்வெடுத்துக்கொண்டிருக்கையில், தண்ணீர்எடுக்கவந்த சமாரித்தபெண்ணைத் தமக்குக்கொஞ்சம் தண்ணீர்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டபோது அவள் ஆச்சரியப்பட்டதும், அதன்பிறகு நடந்தசம்பவங்களும் நாமெல்லோரும்அறிந்தவையே.

திவ்வியயேசுவின்தெய்வீகத்தன்மையை இன்னும் அறிந்துகொள்ளாத போதே, அவர் ஒருசாதாரண யூத வழிப்போக்கர்என்று கருதியபோதே அந்தச்சமாரித்தபெண், அவர் தன்னிடம் சலம்கேட்டதைப்பற்றி ஆச்சரியப்பட்டதற்குக் காரணமென்ன?

சமாரித்தரை யூதர்கள் 'கீழ்சாதியினர்' எனக்கருதி ஒதுக்கிவைத்திருந்தனர். யூதர்கள் சமாரித்தரிடம் உணவுகூட வாங்கிப் புசிக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களை அவ்வளவுகேவலமாக மதித்துவந்தனர். இந்தநிலைமை ஏற்பட்டதற்குக் காரணங்கள் பின்வருவன:-

சலமோன் அரசனின்மகனான ரொபொவாம் யூதேயாநாட்டிலே ஆட்சிபுரிந்துவந்தகாலத்தில் யூதர்களுள் கட்சிகளும் கலகங்களும்ஏற்பட்டு, பன்னிரண்டு கோத்திரத்தாருள் இருகோத்திரத்தார்மட்டும் ரொபொவாமுக்குப் பிரமாணிக்கமாயிருந்துவர, மற்றப் பத்துக்கோத்திரத்தாரும் அவனுக்குக் கீழ்ப்படியாமல் சுயேச்சையாக நடந்துவந்தகாலத்தில் அசீரியஅரசனால் அடிமையாக்கப்பட்டுத் தங்கள் சென்மதேசத்தைவிட்டுப் பலநூறுமைலுக்கப்பால் அழைத்துச்செல்லப்பட்டனர். நாட்டில்தங்கியிருந்த சொற்பதொகையினர் நிலத்தைஉழுது பயிரிடப்போதாததால் நாடுபாழாகிவந்தது.

கடைசியாய், அசீரியதேசத்து அரசனொருவன் அயல்நாடுகளிலிருந்து சிலரை அங்குகுடியேறச்செய்தான். இவர்கள் பலதெய்வங்களையும், விக்கிரகங்களையும் ஆராதித்துவந்தவர்கள். நாட்டில் தங்கியிருந்த யூதமரபினர் இவர்களுடன் கலியாணஉறவுகள்பூண்டு இருதரத்தாரும் கலந்து ஒரேஇனமாயினர். இவர்கள்தான் சமாரித்தர். இவர்கள் நாளாவட்டத்தில் பலதெய்வவழிபாட்டை விட்டொழித்து, ஒரேதெய்வம்உண்டென்பதை உணர்ந்துகொண்டதுமன்றி, மோயீசனின் முறைமைகளில் சிலவற்றையும் அனுசரித்துவந்தார்கள்.

ஆயினும், யூதேயாநாட்டில் வசித்துவந்தயூதர்கள் அவர்களிடம் அணுகாமல் அவர்களைப்புறக்கணித்துத் தூஷித்துவந்தார்கள். யூதர்கள் எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகிப் பலஸ்தீனுக்குவந்து ஜெருசலேம்நகர தேவாலயத்தை மீண்டும் கட்ட ஆரம்பித்தகாலத்தில் சமாரித்தர் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வந்தனர். ஆனால், அவர்களின்உதவி தங்களுக்குவேண்டாமென யூதர்கள் நிராகரித்துவிட்டார்கள். இதிலிருந்து யூதர்களுக்கும் சமாரித்தருக்குமிடையே இருந்துவந்ததுவேஷம் அதிகரித்துக்கொண்டே வரலாயிற்று.

சமாரித்தர் கி. மு. சுமார் 500-ம் ஆண்டில் கெரிஸிம்மலைமீது ஒருஆலயத்தைக்கட்டித் தங்கள் மதச்சடங்குகளை நிறைவேற்றிவரத் தொடங்கினர். இவர்கள் வேறெந்தச்சாதியினருடனும் கலியாணஉறவுகொள்ளாமல் தனித்திருந்ததால் நாளுக்குநாள் இவர்களின்எண்ணிக்கை குறைந்துகொண்டேவந்தது. 1934-ம்ஆண்டு சுமார் 140 சமாரித்தரேயிருந்தனர். சுமார் ஒன்றரைவருடங்களுக்குமுன் பலஸ்தீனாவில் யூத-அராபியயுத்தம் மூண்டபோது சுமார் 90 சமாரித்தரேயிருந்துவந்தனர். இவர்களுள்பலர் சியொனித்தர்என்ற நவீனயூதர்கள் புதிதாக நிறுவிய ரெல்அவீவ்என்றநகரில் வந்து குடியேறினர். மூன்றுகுடும்பங்கள் மட்டுமே நாப்ளூஸ்என்றகிராமத்தில் தங்கியிருந்தன. இந்தமூன்றுகுடும்பங்களும் சிலமாதங்களுக்குமுன் இஸ்ரேயேல்நாட்டில்சென்று குடியேறின. கெரிஸிம்மலைமீதுள்ள ஆலயத்தையும், அங்குள்ள சமாரித்தமதப் புத்தகங்களையும் கண்காணித்துவருவதற்காகச் சிலவயோதிப குருக்கள்மட்டுமே அம்மலையருகில் தங்கியிருக்கின்றார்கள்.

## நாளுசங்கதிகள்

❁ இம்மாதம் 19-ந்திகதி ஆரம்பமான ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பொதுக்கூட்டத்துக்குச் சமுகமாயிருக்கும் இந்திய தூதுக்கோஷ்டியில் ஓர் கத்தோலிக்க குருவானவரும் முதன்முறையாக இருந்துவருகிறார். சென்னை லொயலாக்கல்லூரியின் அதிபரான யேசுசபையைச்சேர்ந்த வண. ஜெரோம் டிசூசா சுவாமிகளே அந்தக் குருப்பிரசாதியாவர்.

❁ பரிசுத்த வருடயாத்திரிகரின் வழிகாட்டிப் புத்தகமொன்று இத்தாலிய பாஷையிலே வத்திக்கான் இராச்சியத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது. இது ரோமாபுரியிலுள்ள 120 விசாரணைப்பங்குகளையும், அங்குள்ள சமயஸ்தாபனங்களையும்பற்றிய விபரங்களையும் கொண்டுள்ளது. பிந்த இது வேறுஐந்து ஐரோப்பிய பாஷைகளிலும் பிரசுரஞ்செய்யப்படும்.

❁ ஜேர்மனியிலுள்ள சர்வகலாசாலைகளெல்லாம் அரசாங்க கல்விஸ்தாபனங்களாகும். ஆனால், இப்போது அங்கே முதன்முதலாகக் கொலோன்நகரிலே ஓர்கத்தோலிக்க சர்வகலாசாலையை அமைப்பதற்கான ஆயத்தம் நடக்கின்றது. இதற்கு ஆரம்பமாய் மூந்த ஓர்இயற்கைச்சட்டஸ்தாபனம் அமைக்கப்படும்.

❁ ஜெருசலேமைச் சர்வதேசங்களுக்கும் பொதுவான ஓர் நகரமாக்குவதற்கு ஐக்கியநாடுகளின் பலஸ்தீன் சமரசகொம்மிஷன் சமர்ப்பித்துள்ள திட்டம்நேர்மையற்றதென்றும், நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத ஒன்றென்றும் அமெரிக்க யூதசங்கத்தின் தலைவரான திரு. லூயிஸ் லிப்ஸ்கி சென்ற 15-ந்திகதி நியூயோக் நகரிலே கூறியிருக்கின்றார்.

❁ பலஸ்தீனாவிலே "சாக்கடல்" அருகில்உள்ள குன்றுகளில்உள்ள குகையொன்றிலேசமீபத்தில் பழையஏற்பாட்டின் பிரதிகள்சில தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இவை கி. மு. 3-ம் அல்லது 4-ம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. இவை தோலில் எபிரேய பாஷையில் எழுதப்பட்டுள்ளன.

❁ பொலீவியாநாட்டின் பிரசாதிபதி தம்நாட்டில் ஆரம்பபாடசாலை உட்பட உயர்தரக் கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளிலும் கட்டாய சமயபோதனையை ஏற்படுத்தியுள்ளார். நூற்றுக்கு 90 வீதம் கத்தோலிக்கரையுடைய இந்நாட்டில், பிறமதத்தினர் இப்போதனையை விரும்பாவிட்டால் விதிவிலக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

❁ கம்யூனிஸ்தர்களான கத்தோலிக்கரைத் திருச்சபைக்குப் புறம்பாக்கும் பாப்பரசரின் சட்டம் வெளிவந்தநாள் முதல் அநேக இத்தாலிய கத்தோலிக்கர் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து விலகிவிடத் தங்களுக்குள்ள கருத்தைத் திருச்சபை அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்களென 'லாக்குறுவா' எனும் பிராஞ்சிய கத்தோலிக்க தினவர்த்தமானி கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசவர்த்தமானம்

### பத்துமடங்கு விளைவு

தென்மராட்சிக் கமப்பொருள் உற்பத்தி-விற்பனவுச் சங்கமானது சென்ற வருடத்திலே 4,800 ரூபா ஆதாயம் பெற்றிருக்கிறது. அது விதைப்பதற்கென்று 200 தொன் ஈரவெங்காயம் பகிர்ந்து கொடுத்து அதற்குப் பதில் 2,000 தொன் ஈரவெங்காயம் பெற்றிருக்கிறது. இந்தவெங்காயம் அரசாங்க கூட்டுறவுப்பகுதிக் கொம்மிஷனருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இந்த விபரங்கள் சென்றவியாழக்கிழமை அச்சங்கத்தின் ஆறுவது வருடப் பொதுக் கூட்டத்தில் வெளியாயிருக்கின்றன.

### மிளகாய்ச் செய்கைப் போட்டி

மன்னார் உபஏசன்றாகிய திரு. ஆர். எல். ஆர்னேல்ட அவர்கள் மன்னார்ப் பிரிவிலுள்ள கிராமவாசிகள் மத்தியிலே மிளகாய்ச் செய்கைப் போட்டியொன்றை ஆரம்பித்துவருகிறார். அதிகமான உணவுப்பொருள் செய்கைபண்ணுங்கள்என்று அவரால் நிர்மாணிக்கப்பெற்றுள்ள பலவித இயக்கங்களில் இதுவுமொன்றாகும். போட்டி ஒழுங்குப்படி, ஐந்து ஏக்கர்நிலத்தில் மிளகாய்செய்கை பண்ணுகின்ற கிராமாபிவிர்த்திச் சங்கங்களுக்கு 50 ரூபாவும், அதற்குமேற்பட்ச் செய்கைபண்ணும் ஒவ்வொரு ஏக்கருக்கும் ஒவ்வோர் 10 ரூபாவும் வெகுமானமாக வழங்கப்படும். இந்தப் போட்டி சங்கங்களிடையே மிகுந்த அருட்சியை உண்டுபண்ணியிருக்கிறது.

### குரங்குகளுடன் யுத்தம்

சாவகச்சேரிப் பகுதியிலே உணவுப் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்ற குரங்குகளுடன் போர்நடத்தி அவற்றை ஒழித்துவிடுமாறு போர் ஒன்று நடத்தவேண்டுமென்பதைச் சாவகச்சேரிவடக்குக் கிராமப்புனருத்தாரண சங்கம் பூரணமாக ஆதரித்து நிற்கிறது. ஓர் ஆரம்பமாகச் சாவகச்சேரிப்பட்டின சங்க எல்லைக்குள் பிடிக்கப்படுகிற அல்லது சுட்டுக்கொல்லப்படுகிற ஒவ்வோர் குரங்குக்கும் 2 ரூபாமுதல் 5 ரூபா வரையில் கொடுக்கவேண்டுமெனப் பட்டினசங்கத்தைக் கேட்பதென்று அது தீர்மானித்திருக்கிறது. பாவம்! குரங்குகளுக்கும் வந்தது கெடுகாலம்!

### லோஞ்சில் அதிக பிரயாணிகள்

அனலைதீவுவாசியும், 606-ம் இலக்கத்தைக்கொண்ட பரமேஸ்வரி என்ற லோஞ்சின் தண்டயலுமாகிய கே. கணபதிப்பிள்ளை என்பவர் இம்மாதம் 15-ந் திகதியன்று 50பேரைஏற்ற அனுமதிபெற்ற அந்த மோட்டர்லோஞ்சில் 79 பேரை ஏற்றினாரென்று, அதாவது 29 பேரை மேலதிகமாக ஏற்றினாரென்று குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறைக் கோட்டிலே தொடரப்பெற்ற வழக்கில் எதிரிதான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டதின்பேரில் 50ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றார்.

### பாடசாலைக் கமச்செய்கை

1949-50-ம் ஆண்டிலே நடைபெறவிருக்கும் உணவுப்பொருட் செய்கை இயக்கத்தில் வித்தியாபகுதி ஒத்துழைக்கவேண்டுமென்று மேல் மாகாண ஏசன்றர் கேட்டிருப்பதானது, அம்மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேவையான விதைநெல்லும், நெற்செய்கைக்கான நிலமும், மற்றும் யந்திரஉதவிகளும்அளித்து டி. ஆர். ஓ. மாரெல்லாம் பாடசாலைகளுடன் ஒத்துழைத்து வருகின்றனர். ஒவ்வோர் பாடசாலையும் நாலில் ஒருபங்குமுதல் எட்டில் ஒரு பங்கு ஏக்கர் நிலத்திலே மிளகாயும், அதேவிஸ்தாரமான நிலத்திலே கிழங்குவகையும் செய்கைபண்ணுவதோடு அரைஏக்கர் நிலத்தில் நெற்செய்கையும் நடத்த முயற்சிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வேண்டிய விதைகளையெல்லாம் அரசாங்க கமத்தொழில் பகுதி உதவவிருக்கின்றது.

### 10லட்சம் மிளகாய்க்கன்றுகள்

மேல்மாகாணத்தைச் சேர்ந்த சீயன் கோறளை கிழக்கிலே அப்பகுதி டி. ஆர். ஓ. ஆகிய திரு. ஹேர்பேட் டி சில்வா அவர்கள் இந்தப்போக காலத்திலே பத்துலட்சம் மிளகாய்க்கன்றுகளைநட்டு மிளகாய்ச் செய்கையை ஊக்கப்படுத்திவிட முன்வந்திருக்கிறார். இதற்கென்று அப்பகுதியின் பலவிடங்களிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் மிளகாய் நாற்றுப் போடப்பட்டிருக்கின்றன. கிராமத் தலைமைக்காரர் இந்நாற்றுக்கன்றுகளைக் கிராமவாசிகளுக்கு இலவசமாகக் கொடுப்பார்கள். அத்துடன் வீட்டுக்குவீடு சென்று மிளகாய்ச்செய்கையைஊக்கப்படுத்திவிடுவார்கள். இம் மிளகாய்ச் செய்கையிலே முதன்மை பெறுவாருக்குப் பணப் பரிசில்கள் வழங்குதற்கென்று நிதிசேகரிக்கப்படுகிறது.

### தேங்காய் எண்ணெய்

கடந்த மூன்றுவாரங்களிலும் ஆயிரம்தேங்காய் 331 ரூபாவீதம் இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகிவருகிறது. இதுவரை தேங்காய்க்குக் கொடுபட்ட அதிகம் உயர்ந்தவிலை இதுவாகும். அவ்வாறே தேங்காய் எண்ணெயின் விலையும் அதிகரித்திருக்கிறது. ஒப்பந்தப்படி பிரித்தானிய இராச்சியத்துக்கு ஒரு தொன் 1,162 ரூபாவீதம் விற்கப்படுகிறது. ஏனைய ஐரோப்பிநாடுகளிலே ஒருதொன் விலை 1,400 ரூபாவரையில் ஏறியிருக்கிறது. இவ்விதம் தேங்காயும், தேங்காய்எண்ணெயும் விலையேறக் காரணம் அவற்றின்தேவை அதிகரித்திருப்பதேயாம்.

### ஆகாயத் தபால்சேவை

இதுவரையிலே இலங்கையிலிருந்து லண்டன் நகருக்கு வாரந்தோறும் மூன்று ஆகாயத்தபாற் சேவைகளே நடைபெற்று வந்தன. இவற்றில் இரண்டு ஏயர்இந்திய சர்வதேசதபாற்சேவை. மற்றொன்று இலங்கை "ஸ்கைமாஸ்றர்" விமான தபாற்சேவை. இவற்றுடன் சென்ற ஞாயிறுமுதல் பி. ஓ. ஏ. சி. விமான தபாற்சேவை ஒன்றும் லண்டனுக்கு நடைபெறத் தொடங்கியிருக்கிறது. இந்த விமானம் அன்று காலை 6-30 மணிக்கு நீர்கொழும்பிலிருந்து தபால்களுடன் புறப்படலாயிற்று.

### இத்தாலிய ரசாயனபண்டிதர்

உப்புக்கொம்மிஷனரின் அரசாங்க பகுதியானது வருகிற மாசிமாதமுதல் இத்தாலிய ரசாயன பண்டிதர் ஒருவரது நிர்வாகத்தில் நடைபெறவிருக்கிறது. இவர் அரசினருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு இங்கு வருகின்றார். சிவிலுத்தியோக சேவையைச் சேர்ந்தவரான திரு. ஈ. பி. திசைவீரசிங்க அவர்கள் 1945-ம் ஆண்டு மாசிமாத முதல் உப்புக்கொம்மிஷனராய் தற்காலிகமாகக் கடமைபார்த்து வருகின்றார்.

### நான்குசதத ஆதாயம்

உடப்புசலாவையைச் சேர்ந்த றப்பகன்னக் தோட்டத்திலே ஓர்வியாபாரியான பெரியபிள்ளை என்பவர் இரண்டு குச்சிப் பெட்டிகளுக்கு அரசினரின் கட்டுப்பாட்டு விலை 6 சதமாயிருக்க, நாலுசதம் கூடியஆதாயம் வைத்து அவற்றைப் 10 சதமாகவிற்று அகப்பட்டு நுவரெலிக் கோட்டிலே சென்ற 22-ந்திகதி குற்றவாளியாகி திரு. வி. ரி. பண்டித - குணவர்த்தன நீதிபதியால் 400 ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றார். அதிகஆசை அதிகநஷ்டம் தான்.

### றெயில்வேயும் நிலக்கரியும்

சமீபத்திலே நிலக்கரியின் விலை தொன் ஒன்றுக்குப் 10 ரூபா வீதம் இறங்கியுள்ளது. அதனால் இலங்கை றெயில்வே இறக்குமதிசெய்யும் நிலக்கரியால் வருடம் ஒன்றுக்கு 26 லட்சத்து 40 ஆயிரம் ரூபா சேமிக்கக்கூடியதாயிருக்கும். றெயில்வே வருடமொன்றுக்கு இந்தியாவிலிருந்து 2,64,000 தொன் நிலக்கரி இறக்குமதி செய்கின்றது.



இளங் குழந்தை

அதன் பால்பங்கீட்டை எப்பொழுதும் விரும்புகிறது. ஆனால் சில குழந்தைகள் "சொகுசு" பிடித்தவர்களாக இருக்கும். அவர்களுக்குப் பால்மேல் விருப்பமிராது. அவர்களைத் திருப்திப்படுத்தவேண்டும். அவர்களுக்கு நேஸ்டோமோல்ட் கொடுத்துப் பாருங்கள். இரு தேக்கரண்டிகள் நிறைய நெஸ்டோமோல்ட் எடுத்து ஒரு கிளாஸ் பாலில் கரைத்து அவன் குடிப்பதைக் கவனியுங்கள். மிகவிருப்பமுடன் குடித்துவிடுவதோடு, மறுமுறையும் சாப்பிடுவதற்கு எப்பொழுதும் ஆவலுடையவனாக இருப்பான்.




"நெஸ்டோமோல்ட்"

என்பது நெஸில்ஸ் மோல்ட்டேட் மில்க்குக்கு கொடுக்கப்பட்ட புதுப்பெயர்.

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு பண்டகசாலைகளிலும் விற்பனைக்கு இருக்கிறது.

### பால் ஆகாரங்கள்

ஸ்ரேர்லிங் நாணய மதிப்புக்குறைவாலே இலங்கையில் முதன்முதலாகப் பாதிக்கப்பட்டிருப்பனவற்றில் பால் போஷணைத் திட்டமும் ஒன்றாகும். ஏனெனில், பவுடராகத்தயாரிக்கப்பெற்ற பாலில் அதிகமானபகுதி அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்தே தருவிக்கப்படுகிறது. அதனால் இதன் விலை அதிகரித்திருக்கிறது. இனிமேல் குறைந்த விலையில் இந்தப் பால்உணவை ஆஸ்திரேலியாவிலிருந்து தருவிப்பதற்கான முயற்சி செய்யப்படுவதாக உணவுத் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

### க்ஷயரோகிகளின் கேள்வி

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலே சமீபத்தில் க்ஷயரோகிகளின் உண்ணாவிரதம்பற்றிப் பூரணவிசாரணை நடத்துவதாகச் சென்ற புதன்கிழமை கூடிய பிரதிநிதிகள்சபையிலே சுகாதாரமந்திரியார் வாக்களித்திருக்கின்றார். அந்த உண்ணாவிரதத்தில் 90 நோயாளிகள் கலந்துகொண்டார்களென்றும், சரியீனங்களுக்கு உத்தரவாதிகளாய்க் காணப்படும் எவரையுமே தண்டிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும், க்ஷயரோகசுகஸ்தானத்துக்கு நிபுணரான ஓர்வைத்தியஉத்தியோகஸ்தரையும், ஆஸ்பத்திரிக்கு க்ஷயரோக விஷயமாய் விசேஷபயிற்சிபெற்ற ஓர் வைத்திய உத்தியோகஸ்தரையும், காரியாதிகாரி ஒருவரையும் நியமனஞ் செய்யவேண்டுமென்பதே அவர்களின் வேண்டுகோளென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

### றெயில்வே இறக்குமதி

றெயில்வேமூலம் சாமான்களை ஏற்றி இறக்குவதற்குள்ள சலார்விகிதங்களைக் குறைப்பதற்கான ஆயத்தம் நடக்கின்றது. அங்ஙனம் குறைக்கப்படுமிடத்து றெயில்வேமூலம் அதிகமான சனங்கள் பிரயாணஞ்செய்யவும், அதிகமான சாமான்களை ஏற்றியிறக்கவும் வழியேற்படுமாம். சாமான்களை ஏற்றியிறக்கும் சலார்விகிதங்களை யுத்தத்துக்கு முன்னிருந்ததிலும் நூற்றுக்கு 50 விகிதம் அப்போது றெயில்வேப்பகுதி உயர்த்திவிட்டது. தற்போதோ இந்தவிகிதங்களைக் குறைத்து, அதிகமான சாமான்கள் ஏற்றியிறக்கப்படுதற்கான வசதிகளைச் செய்ய முன்வந்திருக்கிறது. அங்ஙனம் குறைப்பதாலே லொறிகளின் சொந்தக்காரர் வெகுவாகப் பாதிக்கப்பட்டு நஷ்டமடைவார்களாம்.

### அரிசியின் இருப்புநிலை

கார்த்திகைமாச இறுதிவரையிலே தேவைக்குப் போதிய அரிசி இலங்கையிலே தற்போது இருப்பிலுள்ளது. மேலும் இருமாசங்களுக்கான பங்கீட்டு அரிசி பர்மாவிலிருந்து இன்னும் வரவிருக்கிறது. அரிசிப்பங்கீடுகளும், அதனைக் கப்பல்களில் ஏற்றியனுப்புவதும் இனிமேல் சர்வதேச உணவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கமாட்டாவாகலின் வருங்காலத்திலே இலங்கைக்குக் கிரமமாக அரிசி உதவும் விஷயமாய்ப் பர்மாஅரசாங்கத்துடன் கலந்து பேசி ஓர்உடன்படிக்கை செய்துவைக்குமாறு பர்மாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதியான திரு. சூசன்ரா டி. பொன்சேக்கா அவர்கள் கேட்கப்பட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைவெல்லம்

இலங்கையில், யாழ்ப்பாணக்குடாநாட்டில் பனைமரங்கள்ஏராளம். பனைமரம் பலபிரயோசனங்களை நல்குகின்றது. பனைமரத்தையொட்டிய குடிசைத்தொழில்களும் பல. இவைகளில் பனங்கட்டிசெய்தல், முக்கியமானது. இந்தத்தொழிலை அபிவிருத்திசெய்தால் யாழ்ப்பாணமக்கள் தங்கள்பொருளாதாரத்தை விருத்திக்கலாம். பனங்கட்டிசெய்யும்முறை மிகவும் சுலபமானது. பதநீரிலிருந்து பனங்கட்டி செய்யப்படுகிறது. நீராளன்றுசொல்லப்படும் இனியபதநீர் உடலுக்குமிகவும்நல்லது.

பதநீரைச் சுத்தமாகவடிகட்டியபின் பாத்திரத்தில்ஊற்றி உலையில்வைப்பார்கள். பதநீரில் சுண்ணும்புஇருப்பதால் அதுசூடாக்கப்படும்போது அச்சுண்ணும்பு சிறிதுசிறிதாக அடியில்படியும். இவ்வாறு சுண்ணும்புபடிந்த பதநீரை வடிகட்டிச் சூடாக்கவேண்டும். பதமடைந்தகருப்பநீர் பாணி ஆகிறது. பாணியைக் குட்டான்களில் இட்டு இறுகவைப்பார்கள். இவ்வகையாகத்தான் யாழ்ப்பாணத்தில் பனங்கட்டி செய்யப்படுகிறது. பனங்கட்டி கறுப்பாகவும் இனிப்புக்குறைவாகவும் இருப்பதற்குக்காரணம் பதநீரிலுள்ள சுண்ணும்பு முழுதும் போகாதிருப்பதேயாம். நன்றாகச்சுத்தஞ்செய்தால் பனங்கட்டி வெண்மைநிறமாயிருக்கும்

நன்றாகச்சுத்தஞ்செய்வதற்குப் பின்வரும்முறையைக் கையாளலாம். முதலில் உலையிற்சூடாக்கிச் சுண்ணும்புபடிந்தநீரைப் பிரிக்கிறோம்அல்லவா? அவ்வாறுபிரிக்கப்பட்டபின் பதநீரைக் காய்ச்சும்போது 'ஸுபர்பாஸ்பேட்' என்றஉப்பைக் கொஞ்சம்போடவேண்டும். சிலநிமிஷங்களில் எஞ்சியிருக்கும். சுண்ணும்புஅடியில்தங்கிவிடும். இவ்வாறுள்ளபதநீரை மறுபடியும்வடிகட்டி உலையில்வைக்கவேண்டும். நெருப்பை அதிகரிக்காமல் அளவானசூடுகொடுத்துப் பதமாக்கினால் பனை வெல்லம் வெண்மையுடையதாகும். இனிமையுங்கூடஇருக்கும். இப்படிச் சுத்தஞ்செய்து சீனிதானுஞ்செய்யலாம். பனங்கட்டியில் தேகத்தைவளர்க்கும் பல உப்புகள் உண்டு. எனவே பனங்கட்டி, கரும்புச்சீனியிலும் உயர்ந்த குணம் உடையது.

பனங்கட்டிஉற்பத்தியைப் பெருக்கல் அவ்வளவு சிரமசாத்தியமான காரியமல்ல. யாழ்ப்பாணத்தில் எங்கேபார்த்தாலும் பனைமரங்கள்உண்டு. அவைகளிலிருந்து போதியபனங்கட்டி உற்பத்திசெய்யலாம். பனங்கட்டி உற்பத்தியை அதிகமாக்கிக் கருப்புச்சீனி உபயோகத்தைக் குறைத்துக்கொண்டால் பிறதேசத்துக்குப் போகிறபணம் மீதமடையும். அவ்வாறுமீதமடையும் பணத்தைக்கொண்டு உள்நாட்டு உணவுற்பத்தியை விருத்திசெய்யலாம். யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள பனைமரங்கள் எத்தனையென்று அறிவதற்குப் புள்ளிவிபரங்கள்இல்லை. யாழ்ப்பாணவிவசாயிகள் பனங்கட்டிஉற்பத்தியைக் கூட்டுறவுமுறையில் குடிசைக்கைத்தொழிலாகச் செய்தால் ஒருவிவசாயி மாதம் 15 ரூபாவுக்குக்குறையாமல் உழைக்கலாம்.

நமதுஉடலுக்குக் கரும்புச்சீனியிலும்பார்க்கப் பனைவெல்லம் சிறந்ததென்றுமுன்னர்குறிப்பிட்டோம். இதிலுள்ளஉப்புகள் கரும்புச்சீனியில் இல்லை. பனைவெல்லத்தில்இருந்துமாத்திரமல்ல தென்னை, கித்துள்முதலிய விருட்சங்களிலிருந்தும் நீராளடுத்து வெல்லக்கட்டிசெய்யலாம். அறுபது பனைமரங்களிலிருந்து ஆறாயிரம்இறாத்தல் பனங்கட்டிஉற்பத்தியாக்கலாம். இது கிட்டத்தட்ட 1,500 ரூபா பெறுமதியாகும். செலவு 150 ரூபா வரையில்இருக்கும். மூவர் ஆறுமாதங்கள் வேலைசெய்யவேண்டும்; எனவே ஆளுக்கு 75 ரூபா கிடைக்கும். இங்குதரப்பட்ட புள்ளிவிபரம் நல்லபலனளிக்கும் மரங்களானுற்றான்; எப்படியென்றாலும் நஷ்டம்வராத ஓர் குடிசைத்தொழில் பனங்கட்டி உற்பத்திசெய்தலாகும்.

யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ளவர்கள் இத்தொழிலுக்கு ஊக்கம்அளித்தால் பலகுடும்பங்கள் கவலையின்றிக் காலத்தைப்போக்கலாம். அரசாங்கந்தான் எல்லாவற்றையும் செய்யவேண்டுமென்றிராது, பழய குடிசைத்தொழிலாகிய பனங்கட்டிஉற்பத்தித்தொழிலை முன்னுக்குக்கொண்டுவர முயற்சிக்கவேண்டும். கிராமஊழியர்களும் சமூகசீர்திருத்தக்காரரும் வேண்டியஉதவிகளை அளிக்கவேண்டும். இந்தியாவில் அரசாங்கம்இத்தொழிலை ஊக்கிவருகின்றது. நமதுசுதந்திர அரசாங்கமும் மக்களுக்குவேண்டிய உதவிகளை அளிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது. இக்குடிசைத்தொழில் அபிவிருத்தியானால் நாட்டுக்கு நன்மையுண்டாகுமென்பதற்கு ஐயம்உண்டா?

(ஸ்ரீ லங்கா)

## ருஷியாவும் அணுக்குண்டும்

ருஷியாவிடம் அணுக்குண்டுஆயுதம் இருக்கிறதென்பதைச் சென்ற 25-ந்திகதியன்று சோவியற்செய்திஸ்தாபனம் உறுதிசெய்திருக்கிறது. 1947-ம்ஆண்டிலிருந்தே அணுக்குண்டு இரகசியம் ருஷியாவுக்குத்தெரிந்த இரகசியந்தான்என்று அச்செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. அதுமேலும் தெரிவிப்பதாவது: "ஆயின் இதனால் பீதிஏற்படவேண்டிய அவசியமே இல்லை. அணுக்குண்டு ஆயுதத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற கொள்கையை ருஷியா இன்னும்ஆதரித்துவருகிறது. இம்மாதம் 25-ந்திகதியன்று அமெரிக்கபிரசாதிபதி ட்றூமன் அவர்கள் ருஷியாவிலே சமீபத்தில் அணுக்குண்டுவெடித்ததென்று அறிவித்தார். அதேபோன்றஅறிக்கையை ஏககாலத்தில் பிரித்தானியஅரசாங்கமும்,கனடா அரசாங்கமும் வெளியிட்டன. இதைப்பற்றி அமெரிக்க, பிரித்தானிய, கனடா தேச பத்திரிகைகளும், மற்றநாடுகளிலுள்ள பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டமையால் உலகில் பெரும் பீதி பரவியுள்ளது. இதுசம்பந்தமாகச் சோவியற்அரசு கூறவிரும்புவதென்னவென்றால், 1947-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந்திகதியே சோவியற்வெளிநாட்டுமந்திரியாகவிருந்த திரு.மொலற்றேவ்என்பவர் அணுக்குண்டிரகசியம் இரகசியமில்லையென்று தெரிவித்திருக்கிறார். இந்தஅறிவித்தலிலிருந்து ருஷியாவிடம் அணுக்குண்டுஆயுதம் இருக்கிறதென்பதை உலகம் அறிந்திருக்கவேண்டும்.

ஆனால், அமெரிக்கர் இதைவெற்றுரைஎன்று கருதினார்கள். 1952-ம் ஆண்டுக்குமுன் ருஷியா அணுக்குண்டு இரகசியத்தைக் கண்டுபிடிக்கமுடியாதென்று கருதினார்கள். சோவியற் அரசினரிடம் அணுக்குண்டுகளிருந்தபோதிலும் உலகம் இந்தஆயுதத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற கொள்கையையே ருஷியா இன்னும்அனுஷ்டித்துவருகிறது. ருஷியபுரட்சியின் 30-வதுஆண்டுவிழாவிலேதிரு.மொலற்றேவ் தனதுதேசத்தில் அணுக்குண்டைப்பற்றிப் பிரஸ்தாபித்தும் அமெரிக்கா நம்பாமலிருந்தது. அதுதனது உள்நாட்டுப்பலத்தில் நம்பிக்கையின்றி தனதுஅணுக்குண்டு இரகசியத்தின் மீதே நம்பிக்கைவைத்திருந்தது. இந்த நம்பிக்கை தற்காப்பைமுன்னிட்டல்ல, ஆக்கிரமிப்பை நடத்தவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இருந்துவந்தது."

ருஷியசெய்திஸ்தாபனம் விடுத்த இந்தஅறிக்கையை ருஷியஉள்நாட்டுப் பத்திரிகைகள் பிரசாரம்செய்யும்பொருட்டு மொஸ்கோரேடியோ அதைஉள்நாட்டில் ஒலிபரப்பியது. வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கென்று இந்த அறிக்கையை ஆங்கிலத்திலும் ஒலிபரப்பியது.

## "புதுநன்மைக்கான பாடத்திட்டம்"

கத்தோலிக்க பாடசாலைகளிலே பிள்ளைகளைப் புதுநன்மைக்கு முஸ்திப்புச் செய்வதற்கென்றே பிரதானமாக இப்புத்தகம் எழுதப்பட்டது. இந்த முஸ்திப்பு இருவருடங்களில் ஆகவேண்டியவிதமாய் இதிலே தரப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர்வருடப் படிப்பின்விஷயமும் வாரம்ஒன்றுக்கு 5 பாடங்களாக 35 வாரங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. விளக்கிக்காட்டவேண்டிய ஒவ்வோர்வாரத்தின் பாடப்பொருளும் அதன்பிரதான கருத்தும், அந்தந்தவாரத்தின் காரியக்கிரம சூசிகையின்மேலே தரப்பட்டிருக்கின்றன.

கீழேயுள்ள ஐந்து பத்திகளிலும் (1) ஒவ்வோர் வாரத்தின் அடிப்படையான விஷயமும் (2) அந்தந்தநாட்பாடத்தின் பொருளுக்கு இசைந்த வேதாகமசரிதைகளும் (3) மனப்பாடமாகப் படிக்கவேண்டிய ஞானோபதேசப் பாடங்களும் (4) படிக்கவேண்டிய செபங்களும் (5) வியாக்கியானத்தின் சுருக்கமும், அனுசாணைப்புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன

பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் இலகுவில் விளக்கமாகப் படிப்பிக்க இந்தப்பாடத்திட்டம் மிகவாய்ப்பானது. ஞானோபதேசபாடத்தில் அவர்களுக்கு மிகுந்தஆவலையும் மேலானகரிசனையையும் உண்டுபண்ணக்கூடியது.

குருமார், ஆசிரியர், உபதேசிமார், மரியாயின்சேனையார், மற்றும் கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஓர் அருமையான கைத்துணை இதுவாகும்.

பிரதி விலை சதம் 90.

கிடைக்குமிடம்:

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,

யாழ்ப்பாணம்.

ருஷியாவிடம் அணுக்குண்டுஇருப்பதுபற்றிப் பிரசாதிபதி ட்றூமன் அவர்கள் செய்திவெளியிட்டிருப்பதன்பயனாக அமெரிக்காவின் தற்பாதுகாப்பைப் பலப்படுத்த இராணுவமுஸ்திப்புகள் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் அணுக்குண்டு உற்பத்தியையும், மற்றும்ஆயுதங்களையும் துரிதமாகத்தயாரிக்கும் ஏற்பாடுகளைப்பற்றிச் சமீபத்திலே உத்தியோகதோரணையில்அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாகச் அமெரிக்கபாராளுமன்றம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளத் தீர்மானம்செய்யும். அணுக்குண்டு ஆயுதத்தில் அமெரிக்காவுடன் போட்டியிட ருஷியாவால்முடியாதென்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார். அமெரிக்கா, பிரித்தானி, கனடாஆதியநாடுகளிலே உளவறியும் ஸ்தாபனங்களின்உதவியால் ருஷியா அணுக்குண்டுவைத்திருக்கும் இரகசியம் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் அவர்தெரிவித்துள்ளனர். அணுக்குண்டுவீச்சுநிபுணரான ஜெனறல் கென்னிஅவர்கள் அமெரிக்காவை எவருந்தாக்காமல்பாதுகாக்க 24 மணிநேரமும் அமெரிக்க 'றூடரும்' போர்விமானங்களும்தயாராகவிருக்கவேண்டுமென்கிறார். அமெரிக்காவைப்போல அதிகதூரம்பாயக்கூடியவிமானம் ருஷியாவிடம் இல்லையென்றாலும் அத்திலாந்திக்சமுத்திரத்தைக் கடந்துவந்து குண்டுவீசக்கூடியவிமானம் அதனிடம் இருக்கிறதென்று அவர்கூறுகின்றார். கடல், தரை, ஆகாயப்போர்களில் இனி றூடரும் றெக்கெற்றும் முக்கிய ஆயுதங்களாக இருக்குமென்று இரண்டாவதுஉலகயுத்தத்தில் பிரித்தானிய விமானஎதிர்ப்புப்பீரங்கிப்படைத்தலைவராகவிருந்த ஜெனறல் சேர் பிறடறிக் மைல் அபிப்பிராயப்படுகிறார்.

## யா. ஆ. தி. பா. வி. சங்க பிரவேச,

## பாலபண்டித, வகுப்புகள்.

### தமிழும் சமஸ்கிருதமும்.

மேற்படி வகுப்புகளை ஒக்ரோபர் மாசம் முதலாந்திகதி சனிவாரம் பிற்பகல் 4 மணிக்கு வண்ணார்பண்ணை வைத்தியேஸ்வர வித்தியாலயத்தில் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள், அதிபர், பரமேஸ்வரக்கல்லூரி, ஆரம்பித்துவைப்பார். தங்கள் சமுகம் ஆங்கு வேண்டப்படுகின்றது.

அ. சரவணமுத்து

வித்தியாதந்தோர், செயலாளர்.

யாழ்ப்பாணம், 21-9-49.

## பத்திமா சுரூபம்

பண்டத்தரிப்பு, பத்திமாகிரியின் ஸ்தாபகரான வண. ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் தமது ஐரோப்பிய பிரயாணத்தின்முன் ஓர் செய்தியை வெளியிட்டார். அச்செய்தியிலே யாழ்ப்பாணமேற்றிராணியாண்டவரின் யூபிலி வருடமாகிய இவ்வருடத்தில் பத்திமாகிரிச் சிற்றாலயத்திற்கென ஓர் அழகிய பத்திமாநாயகிசுரூபத்தைத் தருவிக்கவேண்டுமெனத் தெரிவித்திருந்தார். இதையிட்டுப் பலஅன்பர்கள் தம்இருதயபூர்வமான பொருளுதவியை அளித்தார்கள். போர்த்துக்காலுக்கு இவ்விஷயத்தை அறிவித்தபொழுது: "நீர் இங்குவரும்பொழுது பார்த்து உமக்கு விருப்பமான ஓர் சுரூபத்தை எடுத்துக்கொள்ளும்" என்றபதில் கிடைக்கப்பெற்றார் வண. சுவாமியவர்கள். அவர் சென்ற மார்கழியில் தமது பிரயாணத்தைத் தொடங்கினார். சிலமாதங்களைத் தம் சொந்தநாட்டில் கழித்துவிட்டுப்போர்த்துக்கால்சென்று பத்திமாவில்நடந்த பிரதான திருநாட்களுக்குச் சமுகமளித்தார். அப்பொழுதுஎங்கள்பத்திமாகிரிக்கென ஓர் அழகிய பத்திமாநாயகிசுரூபத்தையும் வாங்கியிருக்கிறாரெனவறிந்துசந்தோஷமானோம். இச்சுரூபம் தற்பொழுது பத்திமாவில் இருக்கிறது. வருகிறஐப்பசிமாதம் 13-ந்திகதி இச்சுரூபத்தை லெய்றியா மேற்றிராணியார் ஆசீர்வதிப்பார். அதன்பின் சுவாமியவர்கள் அச்சுரூபத்தை இங்கு கொண்டுவருவார். பத்திமாபதி அடங்கியிருப்பது லெய்றியா மேற்றிராசனத்தில் தான். உலகயாத்திரை செய்துவரும் பத்திமா நாயகியின் திருச்சுரூபமொன்றும் இவ்வருடக்கடைசியில் இலங்கைக்கு வரவிருக்கிறதென்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். ஆகவே நாம் இரண்டுபத்திமா சுரூபங்களை வரவேற்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்வரவேற்புக்காக நம்மைச்செபத்தாலும் தபத்தாலும் தயாராக்கிக் கொள்வோமாக. சுபம்!

S. B.

❀ ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச் சபை சென்ற 16-ந்திகதி கூடியபோது அதிலே "அமெரிக்க ஐக்கியதேசத்திலும் பிரித்தானியிலும்ஆக்கிரமிப்புநோக்கமுடைய சிலவட்டாரங்கள் சோவியற்ருஷியாமீது யுத்தம் தொடர்வதற்குத் திட்டமிட்டுவருகின்றன; இதைமுன்னிட்டுத்தான் அவ்விருநாடுகளும் தங்கள்வசம் இருப்பிலுள்ள அணுக்குண்டுகளை நீர்மூலமாக்க மறுக்கின்றன" என்று ருஷிய, ஊக்றேன்பிரதிநிதிகள் புகார்செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 431. Eng.

## உட்டணமண்டல பிராந்தியங்களிலே இக்கால சேனைகள்

சென்ற மகாயுத்தம் நடைபெற்ற காலத்திலே இக்காலமாதிரியான சிறந்தசேனைகள் ஒப்பளவில் குறைவற்றனவாய்க் கொண்டுவரப்படக்காரணம், யுத்தவித்தையில் நன்கு பயிற்றப்பட்டமை மாத்திரமல்ல, ஆனால் ஆரோக்கியசாஸ்திரம், சுகாதார சாஸ்திரம் ஆதியவற்றில் சகலவிதமான அறிவுகளும் அவற்றிற்கு அருளப்பட்டமையுமாகும்.

தனது படைமருங்கை அணிவகுத்து அடக்கிநடத்தும் முறையில் தனக்கு நம்பிக்கையில்லையென்று கீழ்த்தர படைஅதிகாரி எவரும் தனதுபடைத் தலைவருக்குத் தெரிவிக்க ஒருபோதுமே நினைக்கமாட்டார். ஆனால், குயினைனில் நம்பிக்கையில்லாத பெருந்தொகையான படை அதிகாரிகள் இருக்கின்றார்கள். இவர்கள் உட்டணமண்டலபிராந்தியங்களிலே இருக்குங்கால் குயினைன் அருந்தவேண்டியிருக்கும்போது இலகுவில் இசையமாட்டார்கள்.

படையதிகாரிகள் மாத்திரமல்ல, ஆனால் படைவகுப்பிலுள்ள சிலரும் இந்தவகையில் ஆட்சேபிக்கின்றார்கள் "அப்படிப்பட்ட ஓர் அற்பநுளம்புக்குப் போர்வீரன் ஒருவன் ஏன் பயப்படவேண்டும்?" இதிலே தாங்கள் சரியென்றுகாட்ட இவ்விதம்சொல்லப் பழகியிருக்கிறார்கள். தங்கள் பிழையை இவர்கள் உய்த்துணர்வதில்லை. பயங்கரத்துக்குரிய மலேரியாவைப் பரப்புவதினால் இந்த அற்பநுளம்பே சொல்லமுடியாததும், விலக்கத்தக்கதுமான நிர்ப்பாக்கியத்தை உண்டுபண்ணுகின்றது. ஒரேயொருமுறைமாத்திரம் எவராவது சரியாக மலேரியாவால் பீடிக்கப்படுவாராயின் அப்போதுதான் அவருக்கு எல்லாம் தெரியவரும். தற்சமயம் இல்லாதொழிந்துபோன சர்வதேசசங்கத்தின் அதிகம் நிபுணத்துவம்வாய்ந்த மலேரியாக் கொம்மிற்றியானது, மலேரியாப் பிரச்சினைபற்றி நீடியதும், ஆழமுமான ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிறது. 1938-ம் ஆண்டு பிரசுரமான அதன் அறிக்கையிலே மலேரியாகாலத்திலும், அதற்குப்பின் சிறிதுகாலமும் தினமும் 6 கிறேயின் குயினைன் சித்திகரமான மருந்தென்ற முடிவுக்கு வந்திருக்கிறது. மலேரியாகண்டபின் அதற்கோர் சிகிச்சையாக 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேயின் அருந்தவேண்டுமென்று அது சிபாரிசு பண்ணியிருக்கிறது. முன்சொன்ன அறிக்கையின் 12/5 பக்கம் இந்தச் சிகிச்சையைப்பற்றி விபரமாக அறிவிக்கின்றது. அதேசிகிச்சையே இன்னமும் சிபாரிசுசெய்யப்பட்டு வருகிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த மருதமடுச்செபமாலை மாதாவின் அருளினாலும், கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியார், அர்ச். பிலோமினம்மாள், சந்தானமாதா, அர்ச். செபஸ்தியார், அர்ச். சூசையப்பர், அர்ச். சவேரியார், அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசானவர், சங். அல்போன்சா கன்னிகாஸ்திரி இவர்களின் பாதுகாவலினாலும் எனக்கு நேர்ந்த சண்டை சச்சரவுகளிலும், எனது உத்தியோகத்தின் தொந்தரவுகளிலும், டக்றர்மார் தாமும் கைவிட்ட என்குடும்பத்தில் வந்தகொடிய நோய்களிலும்நின்று அற்புதவிதமாய்க் காப்பாற்றப்பட்டோம். இன்னும் 23-8-49-ல் ஓர் பெண்பிள்ளை உதவிதானுமில்லாது என்மனைவி ஓர் பெண்குழந்தையைப் பிரசவித்து இருவரும் சகல அர்ச்சியசிஷ்டர்களின் உதவியால் பூரணசுகமாயிருக்கிறார்கள். மேற்கண்டசகலஉதவிகளையும் தாமதமின்றிப்புரிந்த எங்கள் பேருபகாரிகளுக்கு நானும் எனது குடும்பமும் எங்கள் மனமுவந்த நன்றித்துதிகளைக் கூறுகின்றோம்.

சே. இன்னசி
மடுரோட்

## பத்திமாவும் போர்த்துக்காலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அற்புதகாட்சிஒன்றைக் கண்டுகொள்ளும்அதிஷ்டம் நமக்குக் கிடைக்கலாயிற்று. அன்றிரவு ஆகாயம் மெல்லியஇருளுடையதாய்இருக்க, பூரணசந்திரனும் விளக்கமற்றிருந்தது. அப்போது சுடர்விட்டு—அழகிய பொன்னிறமான சுடர்விட்டு ஒளிர்ந்த சிலுவைஒன்று, அதுபொருந்துமிடத்தை—அதாவது கல்வாரி மலையிலே சிலுவைமரத்தில் நமதுஇரட்சகரின் திருச்சிரசு சாய்ந்திருந்தபகுதியை—மத்தியாகக்கொண்டு அந்தமெல்லிய இருளடர்ந்தஆகாயத்தில் காட்சியளிக்கலாயிற்று. சிறியதரிசனை சிற்றாலயத்திற்குவெளியே ஏனைய அமெரிக்க யாத்திரிகர்களுள் நான்நின்றுகொண்டு: "ஆகாயத்தில்தோற்றும்சிலுவையைப்பாருங்கள்" என்று உரத்துக் கூறலாயினேன்.

1917-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந்திகதி "சூரியனின் அற்புத"மாகிய பரலோகஅடையாளத்தினால் போர்த்துக்கேயமக்களைப் பரிசுத்ததேவதாயார் சந்மானித்ததுபோல, முதல் அமெரிக்க தேசியயாத்திரிகர்களுக்கும்அவர் தமது உவப்பினதும், பாராட்டுதலினதும் விசேஷ அடையாளமாக இதனைஅருளலாயினரென்றே சிந்திக்கவேண்டியதாயிற்று.

(தொடரும்)

## சூரியோதய நாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடித்தனர். சுசானு யப்பானின் வடமாகாணமாகிய இசுமாவில் அடைக்கலம்புகுந்தான். காலக்கிரமத்தில் அரசனாகவும் மாறினான். யப்பானியர்தங்கள் தேசீயப்பொக்கிஷமாகக்கருதும் திருவாளும், திருக்கண்ணாடியும், திருக்கல்லும்இந்தச்சுசானுதேவனின் பிதிரார்ச்சிதமாம். இந்தப் பரிசுத்தபண்டங்கள் யப்பானியரின்முன்னோர்கள் தெய்வத்தன்மை கொண்டவர்கள்என்பதையும், அவர்கள் இவ்வுலகை ஆளப்பிறந்தவர்கள் என்பதையும் ஞாபகப்படுத்தும்சின்னங்கள்.

சுசானுவின்சந்ததி நாளடைவில் யப்பான்முழுவதும்பரவியது. சூரியதேவதை அமாடெராசுவுக்கு இதுபொறுக்கவில்லை. தனதுதமையனைப் பழிவாங்கத் தீர்மானித்தாள். போரிடும்பல குட்டித்தெய்வங்களை ஏவிவிட்டாள். நாட்டின்மீதுஇப்போரை வெற்றிகரமாகநடத்தி, சுசானுவம்சத்தினரை நசுக்கியவன் அமாடெராசுவின் பேரன் நினிஜிஎன்பவன். இந்தநினிஜிக்குப்பிறந்தமனிதன் ஜிம்முஎன்பவன்தான் யப்பானின் முதல் சக்கரவர்த்தி. அமாடெராசுவுக்கும், ஜிம்முக்கும் இடையே ஐந்து தலைமுறைகள். ஆகவே யப்பானிய சக்கரவர்த்திகள் தெய்வபரம்பரையினர்என்பதை நிலைநிறுத்துகிறது இந்தப்புராணம்.

(தொடரும்)

சத்தியவேத பாதுகாவலன்
Supplement to the Catholic Guardian
வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்
கையொப்ப விகிதம்
முற்பணமாகக் கட்டவேண்டும்

| தமிழ் | | இலங்கை | தமிழும், இங்கிலிசும் | |
| --- | --- | --- | --- | --- |
| வருஷம் | 5-50 | | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | | அரை வருஷம் | 5-50 |
| | | மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.
மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.

## பரிசுத்த வியாகுலமாதா திருநாள்

திரிகோணமலையிலுள்ள சின்னக்கடையில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பரிசுத்தவியாகுலமாதாவின் திருநாளுக்குமுந்திய ஆரம்பதிருவிழாக்கள் கடந்த 15-9-49-இல் கட்டளைக்குருவர் வண. T.ஆறன்ஸ்சுவாமி அவர்களால் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. திருநாளுக்குமுந்திய மூன்றுதினங்களிலும் யேசுசபை வண. K. அலோய்சியஸ் மேரிசுவாமி அவர்களால் "சர்வேசுரனுடைய திருநாட்களை ஆசரிப்பாயாக", "பூசைப்பலியின் நோக்கங்கள்" என்பனபற்றிப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. 25-9-49-இல் காலை வண. கட்டளைச் சுவாமிஅவர்களால் திருநாட்பூசை, திவ்வியநற்கருணைஆசீர்வாதம், கொடிஇறக்குவைபவம், திருச்சுரூபஆசீர்வாதம் என்பனவும், "தேவதாயின் வியாகுலங்கள்"பற்றிவண.அலோசியஸ்மேரி சுவாமிஅவர்களால் பிரசங்கமும் நடைபெறலாயின. திருச்சுரூப ஊர்வலத்தின்பின் அனைவர்க்கும் பாற்சோறு வழங்கப்பட்டுத் திருநாள் சிறப்பாய் முடிவெய்தியது. தேவதாயின் ஆசீர்வாதத்தால் மக்களாகியஎமதுமத்தியில் சந்தோஷசமாதானம் என்றும் நிலவுவதாக.

S. S. J.

## நானுசங்கதிகள்

❁ பிரான்சு தேசத்திலே போடோ, லான்டெஸ்எனும் பகுதிகளில் காட்டுத்தீயாலே கஷ்டப்படுவோருக்கு நிவாரணமாகப் பரிசுத்த பாப்பரசர் 5 லட்சம் பிராங் அனுப்பிவைத்தனர். பிந்தப் பரீஸ்நகர் அதிமேற்றிராசனமும் 5 லட்சம் பிராங் அனுப்பிவைக்கலாயிற்று.

❁ இந்தியாவிலே கூச்பீஹார் என்ற மற்றுமோர் சுதேசசமஸ்தானமும் இம்மாசம் 12-ந்திகதியன்று இந்தியயூனியனுடன் சேர்ந்துகொண்டது. இதன் விஸ்தீரணம் 1,318 சதுரமைல். சனத்தொகை ஆறரைலட்சம்பேர். இதன் வருடாந்த அரசிறைவருமானம் 91 லட்சம் ரூபாவாகும்.

❁ உலகபஞ்சாங்கமானது, நிலையானதாய், ஏகரூபமானதாய், சூரியனைச்சுற்றிப் பூமி இயங்குதற்கேற்ப வானசாஸ்திர முறையில் ஒழுங்குபண்ணப்பட்டதொன்றாய்த் திருத்தியமைக்கப்படவேண்டுமென்று கேட்டுப்பனமாப்பிரதிநிதி தற்போது கூடியிருக்கும் ஐ. நா. பொதுச்சபையிலே ஓர் பிரேரணைகொண்டுவந்திருக்கிறார். அங்ஙனம் மாற்றியமைக்குமிடத்து வாரத்தின் அதேநாளில்தானே பஞ்சாங்கத்தின் திகதிகளெல்லாம் எப்போதும் வந்துகொண்டிருக்குமாம்.

❁ நேசதேசங்களுக்கு ஆயுதங்கள் கொடுத்துதவிசெய்வதற்கெனப் பிரசாதிபதி ட்றூமன்வகுத்த 131 கோடியே 40 லட்சம்டலர்திட்டத்தை அமெரிக்க செனற்சபை சென்ற 22-ந்திகதி அங்கீகரித்திருக்கிறது. இந்த இராணுவத்திட்டமானது மேற்குஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுதங்கள்உதவ 100 கோடிடலர் உதவுவதோடு இராணுவ உதவிக்கென்று கிறீஸ், துருக்கி, பார்சியா, கோறியா, பிலிப்பைன்ஸ்முதலியநாடுகளுக்கும் 31 கோடியே 40 லட்சம்டலர் உதவவிருக்கின்றது.

❁ இவ்வருடத்திலே இதுவரையில் அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து பத்து அதிமேற்றிராணிமாரும், ஐம்பது மேற்றிராணிமாரும் வத்திக்கான் மாளிகைசென்று பாப்பரசரின்பேட்டி பெற்றிருக்கின்றார்கள். இவர்களிலே அதிகஞ்சமீபத்தில் பேட்டிபெற்றவர் டெற்றோயிட்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் மூனிஆண்டவரே.

## நேர்த்தியின் பூர்த்தி

எனது தாயை இரண்டுவருடம்முழுவதும் கொடியநோய் வாட்டிவந்தது. அப்போ பலவைத்தியரிடமும் காட்டிக் கடைசியில் இனி மருந்தில்லையென யாவரும் கைவிட்டனர். ஆனால் என் தாயானவள் பூரணவிசுவாசத்துடன் மாறுவிலுள்ள பாடுபட்ட சுரூபத்தின் பாதத்தடியில் தங்கிநின்று வேண்டுதல் செய்யும்படி சென்றிருந்தா. நான் அத்தருணம் அர்ச். தேவமாதாவிடமும் அர்ச். சூசையப்பரிடமும், விடாதநம்பிக்கையுடன் வேண்டிக்கொண்டேன். சுமார் 7 வாரங்கள் அம்மா அவர் பாதத்தடியிற் செலவழித்தா. பின்பு அரைவாசிச் சுகத்துடன் வீட்டையடைந்தா. இன்னும் படிப்படியாகச் சுகம்பெற்றுக்கொண்டே வருகிறா. தற்போது முக்கால்வாசிச் சுகத்தையடைந்து விட்டா. பூரணசுகம் கிடைக்குமென்பதே எனது நம்பிக்கை. மாறுவில் பாடுபட்ட சுரூபத்தினதும் அர்ச். தேவமாதாவினதும் அர்ச். சூசையப்பரினதும் திருநாமங்கள் என்றும் புகழப்படுவதாக. நேர்த்திக்காகஇதனைப் பிரசுரப்படுத்துகிறேன்.

J. C. Peries,
Thoppu,
Kochchikade.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தாலும் பரிசுத்த தேவமாதா அர்ச். சூசையப்பர், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். அந்தோனியார் இவர்களுடைய உதவியாலும், சங். கன்னி அல்போன்சாவின் விசேஷ மன்றாட்டாலும் எங்களுக்கு வரஇருந்த ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டோம். இவர்களுக்கு என்றும் நன்றியறிந்தஸ்தோச்திரம். நேர்த்தியின் படி இதைப்பிரசுரிக்கிறேன்.

R. M.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 29 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org